# “சும்மா சுகமாக இரு”

## இதழ் -1





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “சும்மா சுகமாக இரு”

## இதழ் -I

# பொருளடக்கம்


1. கேள்வி பதில்------------------------------------------------------1

௨. பொது விதி---------------------------------------------------------௩5


எல்லாம் நீ!



உ

(1)

உன் கேள்வி:— தாங்கள் இங்கு இருக்கும் போது,
நடந்த ஓர் சம்பவம்:— ஓர் நாள் தாங்கள் ஹார்த்துவார்,
என்னும் இடத்திலுள்ள, ஓர் அன்பருக்காக,
காத, ஓர் நிகழ்ச்சியை, சொன்னீர்கள், சென்று வந்த
கேள்விகள் தோன்றுகிறது! அதுபற்றி சில
சிரமத்திற்கு மன்னிக்கவும்!

(A) தாங்கள் அவர் நேருக்கு நேராக தரிசிக்க முடியுமா?

(B) அங்கு அவர், தாங்களுடன் பேச முடியுமா?

(C) நீங்கள் இருவரும், பேசும் போது, அருகில் இருப்பவர், களுக்கு, அதை கேட்க முடியுமா?

(D) அடியேனும், மனம் உருகி அழைத்தால், தாங்கள் வருவீர்களா பாபா! (இதை எழுதும் போது தாங்கள் படம், பூஜை அறையில் இருந்து, கீழே விழுந்ததே, அதன் கத்தை காரியம் என்ன???)



உ

(௨)

உன் கேள்வியின் விளக்கம்:-

(A) தாங்களோ, அவர் நேரில், தரிஸிக்க முடியுமா?

பதில்:- உனக் கண்களால், காண முடியாது! ஆனால் ஞானக் அறிவுக் கண்ணால் உணர முடியும்!

(B) சங்கேதபாஷை என்னும் அறிவை! அறிவால்! உணர முடியும்!

(C) ஓசையும் கேட்க முடியாது, எங்கள் இருப்பையும் உணரவும் முடியாது!

(D) அவஸ்யம் வருவோம்! என்று சொல்வதைவிட, உன்னுள் நிறைந்திருப்போம்! நிறைந்திருக்கிறோம்! ~~ஆனால் நீ காணவோ, உணரவோ முடியாது! நாமரூபஜகத்தை~~ தோழர்களை விட்டால் முடியும் இதுவே பிரமாண உண்மை!

இனி இதன் விளக்கம்!

அன்பான குழந்தாய்! !!!!!!

இக்கேள்வியின், முழுமையான பதிலே:- இங்கு மனதை ஜயித்தவர்களுக்கே, இதுஸாத்தியமா (ஜெ.)

அதாவது நாமரூப, ஜக ஜீவ, குண தோஷங்கள் முழுமையாக இறந்து நிர்பெற வேண்டும்! அதாவது, தாவ விருத்தியாகிய ஞாபனன் நசிக்க வேண்டும்!



உ ௨

ஆனால் இங்கு சாதகனாவன்,
அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.
அதாவது, ஸ்ரீபகவான் நிலையை, முழுமை
யாக பெற்றிருக்கவேண்டும்.
அந்த ஸ்ரீபகவான் நிலையிலும், அவனுடைய
மாயா, இவனைப் பற்றாமலும், மாயாவை இவன் பற்றாமலும்
மாயாமனாதீ, அற்றவனாகவும் இருக்கவேண்டும்.
செயல் படுத்தியவர், பரநிலை அனுபவம் வேண்டும்.
,, படுபவர் சாட்சியாவனியால் இருந்தாலும் போதும்.
தாபபாவனை, கண்டிப்பாகக் கூடாது.
அனுபவிப்பவர், சாட்சி நிலையில் இருந்தாலும், மன
உருக்கமும், ஏக்கமும், தரிசனத்தில் துடிப்பும்,
உள்ளவராக இருக்கவேண்டும் இது அறிவின்
நிலையாகும்.
அருள் பாலிப்பவர், சர்வசாட்சி நிலை, பெற்றவராக,
பேரறிவு உள்ளவராக இருக்கவேண்டும்.
இவ்விருவர் சந்திப்பிலும் அஷ்ட ஸித்திகளோ
வல்லப சக்திகளோ, பயன்படுத்துவதில்லை.
ஆனாலும், ஸ்ரீபகவானுடைய மாயா பயன்படும்.



உ

பேரறிவோடு, கூடிய அவருக்கு, சாட்சி நிலையின் அறிவோடு கூடிய, அவன் அதாவது, ஸ்ரீ பகவான் உறுதுணையாக இருப்பான்! இருந்தே ஆகவேண்டும்! இது ஆணையும் இல்லை! கண்டிப்பும் இல்லை!!

அவன்தான் செயல் படுவான் அவர் செயல்படார்!

பரா கருணையும்! இறை கருணையும்!! பேதமில்லாமல், இணைந்த நிலையாகும்!

இடம் விட்டு, இடம் போகுதல் என்பது:-

கண்டம் விட்டு கண்டம் போகவும் முடியும்!

அண்டம் விட்டு அண்டம் போகவும் முடியும்!

கோடானு கோடி கோள் களுக்கும்! அதற்கு அப்பாலும், அந்த வெளியே போகவும் முடியும்! அங்கு இருக்கவும் முடியும்! அங்கு இயங்கவும் முடியும்! இவை அனைத்தும் யோக மாயாவின் காரியமாகும்! இங்கு பரம் செயல்பட, இயலாத்தன்மையினால், ஸ்ரீ பகவானை ஓர் காயப் பொருளாக கொண்டு செயல்படுத்த முடியும் ஆதல் இங்கு ?



உ

(5)

பரசொரூப அம்சம் பெற்ற அவர், அதாவது சர்வசாட்சி நிலை (அகண்ட பாவனை) பெற்ற அவர்! **பர** அம்சமாக இருந்தாலும், தான்தானே, செயல்பட முடியாது! இயலாது! செயல்படக்கூடாது! **இறை** அம்ச ஸ்ரீபகவான் மூலமாகவே, செயல்படமுடியும்! செயல்படவேண்டும்!

இங்கு பரஅம்ச, சொரூபமான இவர், முன் சொன்ன **பக்குவ ஆன்மாவான** அவரிடம், அதைப்பற்றி பேசுவதோ! அவர் நிலை கண்டு பேசுவதோ) முடியாது!

இவர் பேரறிவாக இருப்பதால், செயலற்றிருப்பதால் செயலுற்ற அறிவின் ஸ்ரீபகவானின் **அனுமதியும்! ஆசியும்!** இல்லாமல், இயக்கமுடியாது! இதை எப்படி சொல்வதென்றால் **அறிவு** காரியமாகும்! **பேரறிவு** காரணமாகும்!

ஆகவே காரணம் இல்லாமல், காரியம் இல்லை! காரியம் செயல்படாமல், காரணம் இருந்தும், அது **இல்லாததேயாகும்!** காரணம் பரசொரூபத்திற்கென, **தனி** இருப்பு இல்லவே இல்லை. பரசொரூபமன்றி வேறு எதுவும் இல்லவே இல்லை!



உ

ஓர் முக்கிய ரகஸ்யம் :- சாட்சி நிலையுள்ள பக்குவ ஆன்மா, சர்வ சாட்சி நிலையுள்ள, **பரசொரூபத்தை** உணரவும்; அதுவாகவும் துடிப்பு நிலையோடு இருக்கும் போது தான், இந்த **சந்திப்பு** ஏற்படவாய்ப்பு உண்டு!

இந்த துடிப்பு நிலையை, அறிவு சொரூபமான (சாட்சியான) ஸ்ரீ பகவானை, உணர்வான். செயல்படுத்துவான். அப்படி செயல்படும் போது, பேரறிவு மூலமாகத் தான், செயல்படமுடியும். இந்நிலை சாட்சி நிலைக்கு, அப்பாற்பட்ட சர்வசாட்சியாக இருப்பதால், ஸ்ரீ பகவான் **நேரடியாக** செயல்படக்கூடாது; செயல்படமுடியாததே, விதி ஆகும்! நியதியும் ஆகும்!

அப்படி சந்திக்கும் போது?

(1) அருகில் ஓர் பக்குவ ஆன்மா இருந்தால், அவர் **தாயவடிவின்** மூலம் இயங்கமுடியும்!

(2) இவர் **ஒளி** வடிவத்தில், அவர் **உள்** ஒளியில், சங்கேத பாஷையில், உணர்த்த முடியும்! இது பேரறிவின் திறமையாகும்.

(3) இதை எவரும், கேட்கவோ, அறியவோ, உணரவோ, முடியாது! இது பரம ரகஸ்யமாகும்!

(4) மனம் பக்குவப்பட்டு, மனதற்ற தன்மையானால், இங்கு மனம் அறியாது! தூலம் ஜடமாக இருப்பதனால் வேறு தூலஇயக்கங்களும், அறியமுடியாது!



7

(ஓர் நிலையில்)
அம்மாவாகவும்! (ஓர் நிலையில்)
குழந்தையாகவும்!
அமைந்த எம் செல்வமே!

யாம் அழைத்தாலும், வருவீர்களா பாபா?
என ஓர் கேள்வியை, படித்ததும், எம் மெய்யன், கண்ணன்,
குலுங்கி, குலுங்கி, சிரித்தான்! நீயே அவனாகவும்!
அவனே நீயாகவும்! இருக்கும் போது, யார் யாரை,
அழைப்பது? யார் யாரிடம் போவது!! ஆனாலும்?
**மாயா மனத்திரை** மூடியிருப்பதால்;
இக்கேள்வியை அது கேட்கிறது போலும்? பரவாயில்லை!!
கொழுந்தே! அவசியம் உன் பாபா வருவார்.
ஆனாலும் ???
உன் பாபா **பேரறிவு** சொரூபம்!
ஆனால் யாமோ **அறிவு** சொரூபம்!!
ஆனால் நீயோ **மனவடிவம்!** ஆனால்?
இப்போது, அறிவாக; அணு அணுவாக, மாறி வருகிறாய்.
அச்சமயம், உன் பாபாவை, உன் ஊனக் கண்களால், காண
முடியாது! அறிவு (ஞானக்) கண்ணால், அறிய முடியும்!
உணர முடியும்! சங்கேத பாஷையில், பேசவும் முடியும்!
அந்நிலை பெற, பாபாவாக **யாமும்!** யாமாக
**பாபாவும்!** இணைந்து, வாழ்கிறோம்! கலைகண்ணன்.
எல்லாம் ஒன்றே!
அது இவனே!
அது யாமே! அது நீயே! இது சத்தியம்! **பாபா.**

(8)

உள்ளத்திலே கோவில் கொண்ட, உண்மையை (தெய்வத்தை) உணராமல், தேடி தேடி, ஓடி ஓடி, அலைவது அஞ்ஞானம்!

நீ பகவானுக்கு உள்ளமே கோவில்!

" கண்ணீரே காணிக்கை!

அம்மா!

உ

உன் கேள்வியின் முக்கியம்?

① கல்லாலான தேவதெய்வத்திலும்!

② மண்ணாலான ஆலயங்களிலும்!

③ பிரேம் போட்ட படங்களிலும்!!


யாம்

இல்லவே இல்லை, என்பதை உணர்த்தவே, மெய்யன் கண்ணன், பூஜை அறையிலுள்ள படத்தை தூக்கிப் போட்டான் என, சத்தியமாக உணர்வாயாக! யாம் (கண்ணன் பாபா)

உன்னுள்ளே யாமாய்! எம்முள்ளே நீயாய்!

அனைத்திலும் நாமாய் இருக்கிறோம் என்பதே சத்தியம்!

[signature] பாபா




9

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"! "யத் பாவம் தத் பவதி"!

ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்!"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

"கருணை என்றால் தெய்வம்!" "தெய்வம் என்றால் கருணை"!

"அன்பே தெய்வம் ஆகும்!" "அறிவே குரு ஆகும்!

"கோபம் சண்டாளனாகும்"! "காமம் நரகக் குழி ஆகும்"!

"ஆத்திரம் அறிவு நாசம் ஆகும்"! "பொறுமை மோட்சம் ஆகும்"!

"நண்பனும் பகைவனும் உன்னுள்ளே"! "வெளியில் இல்லை"!

"மனமே பகைவன்"! "அறிவே நண்பன்"! பொறுமையினால் உணர் வாம்!

"உடல் உணர்ச்சிக்கு அடிமையாகாதே"! "அக உணர்வோடு இரு"!

"தேவையும் ஆசையும் கணவனும் மனைவியுமாகும்! "இவ்விருவரும் இணைந்தால் சந்தேகம், களங்கம், கலக்கம், பயம் உண்டாகும்"!

எல்லாம் ஸ்ரீ பகவான் பொருள்! எல்லாம் ஸ்ரீ பகவான் செயல்!

இது ஸத்தியமானால், உனக்கு (அஹந்தைக்கு இருப்புக்கு) இடமே இல்லை!

உன் இயக்கத்திற்கு (உரிமைக்கும், உடைமைக்கும்) இடமே இல்லை!

நான் என்னுடையதை நீக்கு! எல்லாம் நீயே! எல்லாம் உனதே என ஆக்கு! நலம் பெறுவாய்! சுகம் பெறுவாய்! — ஸ்ரீ பாபா.



உ

(10)

ஹே அன்பான பாபா! ஓர் சிறிய சந்தேகம்
இது நம் அன்பர்கள், அனைவர் உள்ளத்திலும்
இருக்கிறது. நம் அன்பர்கள் சார்பில்,
அனைவருக்காகவும், இதை கேட்கிறோம்!
தவறாக இருந்தால், இந்த ஏழையின் சார்பில்,
அனைவரையும் மன்னியுங்கள்!

(1) தாங்களின் மடல்களில், சமீப காலங்களில், வருவனவற்றில், கண்ணனையாம் என்றும், யாமே அந்த கண்ணன் என்றும், மறைமுகமாகவும், சில இடங்களில் ஸ்பஷ்டமாகவும் வருகிறது! இதை நாங்கள் அனைவரும் கவனிக்கிறோம்! உணர்கிறோம்! முழுமையாக நம்புகிறோம்!

(2) அதே நேரம், ஸத் ஸங்க உரையாடல்களில், தாங்கள் வாக்குவாயிலாக, அவ்வுண்மை அங்கு வரவில்லை! அங்கு, அதற்கு மாறாக, அவனே நடத்துகிறான் என்றும், அனைத்தும் அவன் பொருளே என்றும், நாம் அனைவரும், அவனால் ஆட்டிப் படைக்கும் பதுமைகள் என்றும், அவனன்றி அணுவும் அசையாது என்றும், பக்தியவாசகம் வருகிறது! இதை அனைவரும் நம்புகிறோம்! ஏற்கிறோம்! நடக்க முயற்சிக்கிறோம்!

இங்கு எங்கள் கேள்வி எல்லாம்?????

(A) எங்கள் அனைவரின், முழு நம்பிக்கை எல்லாம், அவன் (கண்ணன்) வேறு! தாங்கள் வேறு அல்ல! என்பதே பக்தியம்! அப்படியானால்?
இங்கு அவன், தம்மை தானே மறைக்கிறானா? அல்லது, அவனை நாங்கள், அறிய வொட்டாமல், மறைக்கிறீர்களா?

(B) ஸ்ரீ பகவான், கருணைக்கடல் என்கிறீர்கள்! அப்படியானால் தாங்களாகிய அவனே! அவனாகிய தாங்களோ! எங்களுக்கு, கருணைகாட்ட தாமதம் ஏன்?





(C) அவனே தாங்கள் என்றும், தாங்களே அவன் என்றும், உணர வொட்டாமல், எங்களுக்கு, தடையாக இருப்பது எது?

(D) இங்கு தாங்கள், அழகவாக்கு, ஓர் வழி நிலையையும், தாங்களின் மடல்களின், வரிவடிவம், ஓர் வழி நிலையையும், சுட்டி காட்டுவது ஏன்?

(E) தாங்கள் அனுபவ சாதனையானது, சுத்த அத்வைதமா யிருக்க, ஆத்ம போதனையில், த்வைத பேதம் ஏன்?

,பரம கிருபாநிதியையும், கருணாகரனையும், ஆகிய தாங்களிடம், சந்தேகமோ, அதைச்சார்ந்த கேள்விகளோ, கேட்கும் நிலையில், நாங்கள் அனைவரும் இல்லவே இல்லை! காரணம், தாங்கள், சாதனையால் தரும், போதனை அனைத்தும், தெள்ளத் தெளிவாகவே இருக்கிறது! தாங்களே இறைவனாகவும், குருவாகவும், இருந்தாலும், அனேக நிலைகளில், ஸ்ரீபகவானுக்கே, முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்! அதன் காரணத்தையும், சற்று கோடிட்டு காட்டி விடுங்கள்! இந்த ஸ்ரீபகவான் நிலையில், நாங்கள் அனைவருமே, சற்று குழப்பம் அடைகிறோம்!

காரணம்:- தாங்கள் வாக்கும்! வரிவடிவமும்தான்! அக்குழப்பத்திற்கு காரணம்? மற்றும் எங்கள் அனுபவ நிலையில், தாங்கள் மடல்களைப் படிக்கும் போது, உதேயும் ஓர் கேள்வி எழுந்தால், அதை அடுத்த வரிகளிலோ, அடுத்த பக்கங்களிலோ, தெளிவாகவும், ஸ்பஷ்டமாகவும், விளக்கம் வந்து விடுகிறது! ஆனால் இந்த இரண்டிற்கும் மட்டிலும் விளக்கம் காணமுடியவில்லை! இரக்கத்தோடு மன்னிக்கவும்!



(12)

ஓர் ஏழை வைத்தியத்தின் பதில்:—

(A) ஆத்மானந்த குழந்தாய் கண்ணா!

மாயக்யனாகிய, திருடன் கண்ணன் வேறு, இவ் வேழை வைத்தியம், வேறு அல்லதான்! இருப்பினும், அவன் யோக காரியம் வேறு! எம் பரமார்த்த காரணம் வேறுதான்!

அவன் ஜீவ ரக்ஷிப்பு என்றும், யாம் ஜீவ அழிப்பு என்றும், அன்பர்கள் அனைவரும் அறிந்ததே! அவன் இயக்கம் உற்றவன் என்றும், யாம் இயக்கம் அற்றவன் என்றும், அறிவு பூர்வமாக, உணர்ந்தால் மட்டுமே இவ்வுண்மையின் ரகஸ்யம் விளங்கும்! அவன் சூட்சுமமாக இருப்பதால், அவன் இருப்பையும், இயக்கத்தையும், எவரும் காணவும் முடியாது! அறியவோ, உணரவோ, முடியாதுதான்! யாம் காலாதீத "அதுவாக" இருந்தாலும், உங்களை போன்ற மெய்யன்பர்கள், காணவும், அறியவும், உணரவும், விளக்கம் கொடுக்கவும், வாங்கவும், இப்படி ஓர் "உடல்போல்" வேஷம் தரித்தால்தான், மனம் வசம் அகப்பட்ட உங்களால் "நமை" முடியும். மனதை உங்கள் வசம், கொண்டோர்களால் "அவரும்" மறைய முடியாது "யாமும்" மறைக்க முடியாது! யாம் இயக்கம், அற்றவராக இருப்பதால், இயக்கம் உற்ற, அவனைத்தானே, சுட்டிக் காட்ட வேண்டும்! வேறு வழியே இல்லை!



உ

(13)

கே) நீ சொல்லும் "கருணை" யானது! மனம் படைத்த மனிதர்களிடம் மட்டும் "மறைபக்குவம்" கண்டு வெளிப் படும்! எல்லோரிடமும், அது வெளிப்படாது!

ஆறைப் இறை / பர / குரு! கருணை யென்பது, ஓர் நிலையில், "ஜலப்பிரவாகம்" போன்றதாகும்! அதாவது இக்கருணைப் பிரவாகமானது "வேகத்தோடு" கூடியதல்ல! "பள்ளம்" உள்ள, இடத்தை மட்டும், நிரப்பும் அருள் நிலையில், உள்ள கருணைப் பிரவாகமாகும்! "மேடானதை" அகற்றவும்! அழிக்கவும்! முடியாது! இயலாது!

"மேடு" என்பது, மனதின் கோட்பாடாகும்! மனம்தான் அக்காரியத்தை பண்ண வேண்டும்! பண்ண முடியும்! ஈஸ்வராங்கிகள், சாட்சியாகவும்! ஆத்ம ஞானிகள் சர்வசாட்சியாகவும் இருப்பதால்! அவர்களிடம், மனம் இல்லாத்தன்மையினால் மேட்டை பள்ளமாக்கும் காரியம், அவர்கள் செய்ய முடியாது! செய்யக் கூடாது! செய்ய இயலாது!

மேடு என்பது:– நான்! என்றல்! என்னுடையது! என்ற அஹங்கார, அதிகார, அபிமான முகமையாகும்!

அம் மேட்டை அகற்றுவதென்பது

அது ஓர் ஆத்ம சாதகனுடைய, பயிற்சியும், முயற்சியுமாகும்.

"அவனையும் எம்மையும்" அவனாகிய எம்மையும்! யாமாகிய அவனையும்!! இது இன்னார் என்றும், இது இன்னார் என்றும், உணரவொட்டாமல் தடுப்பது அஹங்கார, அதிகார, அபிமான முகம்தான்!



மேலும் "முற் கவன" சக்தியும்,

"தற் காப்பு" சக்தியும்;

இணைந்து "தற் கவன" சக்தி

இவ்வாறு தே காரணம் ஆகும்! (இதற்கு யாரும் அல்லவும் பொறுப்பல்ல) இந்த முற் கவனசக்தியும், தற் காப்பு சக்தியும், (இணைந்து) விளைவது குற்றம் குறையும்! பேதமும்! விருப்பு வெறுப்புமே! உங்கள் மனத்திரையே காரணமாக அமைகிறது! நீங்களும் பொறுப்பல்ல. நீங்கள் எம் அம்சம். உங்கள் மனமே காரணம்!

D "அழுத வாக்கு:— ப்ர" ஒலியாகும்! அது "குரு" வாக்காகும்! அது செயல்படாத்தன்மையிறல் செயல்படும் நிலையாகிய "ஸ்ரீபகவானையே" சுட்டிக்காட்ட வேண்டும்! அதுவே தர்மம்! அதுவே நீதி! நியதி!

"வரிவடிவம்:— ஸ்ரீபகவான் நிலையாகும்! இதைவ, ஸ்ரீ பரசொரூப நிலையையும்! அதன் அம்சமான, ஸ்ரீபகவான் நிலையையும்! சுட்டிக்காட்டி, "அதுவே" யாம் என்றும், "அவனே" யாம் என்றும்; ஆணித்தரமாக, எடுத்துக் கொடுத்தால் தான், உங்களுக்கு அனுபவம் கிட்ட வாய்ப்பு உண்டு! (நாவத்தால் சுட்டிக்காட்டா விட்டால் நம்பிக்கை வராது!)

"சூட்சுமம்" (அழுதவாக்கு) "தூலத்தை" சுட்டிக் காட்ட வேண்டும்.

"தூலம்" (வரிவடிவம்) "சூட்சுமத்தை" சுட்டிக் காட்ட வேண்டும்.

இதுவே ஸ்ரீ மஹான்களின், அனுபவமும் தர்மமும் ஆகும்! அப்படியானால் தான் நம்பிக்கை பெற முடியும்! ஸ்வய அனுபவமும் தர வேண்டும்!



உ

(15)

(E) அத்வைதம் என்றாலே நாமரூப, குணம் கடந்ததும் வாக்குக்கும், மனதிற்கும், எட்டாததான ஒன்றாகும்!

துவைதம் என்றாலே "நாமரூப" தூலமோ, சூட்சுமமோ, வடிவத்தோடு (ஸ்ரீ பகவன் நாமரூபம்) கூடிய ஒன்றாகும்!

தூலம் :- மனக்கண்களால் (இரண்டு கண்களால்) காணும் ஒன்றாகும்!

சூட்சுமம் :- இந்த மனக்கண்களால், காணும் தூல நாமரூப, காட்சிகளை, "பொய்" எனத் தெளிவு, பொய் என அதனில் யால் அஹங்காரமும், விவகாரமும், மயங்காமல் இருந்தால், பொய் "கண்ணாடி" பாத்திரத்தில் அடையாமல் இருந்தால், இருக்கும் ஒன்றை "ஸ்பஷ்டமாக" எப்படி காண முடியுமோ அப்படி அந்த, ஞானக்கண் என்ற "அறிவு கண்" (கண்கள் அல்ல) ணால் காண முடியும்!

(A) தூலத்திற்கு, கண்களும், மனமும், காட்சியும் சாட்சியுமாகும்.

(இ) சூட்சுமத்திற்கு, அறிவும், உணர்வும், "சு" "

ஆகவே, சூட்சுமத்தினும், "அதிசூட்சுமமான" அந்த ஒன்றை (நிராகார பரசொரூபத்தை) சூட்சுமமான, அதாவது, அறிவு சொரூபமான, அதாவது, ஸ்ரீ பகவத் சொரூபமான ஓர் வடிவமாக, நாமரூபத்துடன், கருமசொரூபமாக சுட்டிக்காட்டி, (துவைதமாக சுட்டிக்காட்டி) அதை "அத்வைதமாக" உணர்த்துவதே, ஸ்வய ஆத்ம ஞான பாடமாகும்!

உ



வேத வேதாந்த சாஸ்திர பாடங்கள் அர்த்தம் அதை உணர்த்துவதாகும். உணர்ந்ததாக (அதாவது உண்டாக்குவதாகும். உண்டதாகாது.

இங்கு பாடம் படிப்பு, பயன்படாது; பயன்படுத்த முடியாது. பயன்படுத்த இயலாத ஒன்றாகும்! இங்கு "அனுபவமே" காட்சியாகவும் | சாட்சியாகவும்! அமையும், என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்! ஆகவே, சுத்த அத்வைதத்தை! அதாவது "மாசு படாத அத்வைதத்தை! "சிறிதும் மாசுடன் கூடிய, த்வைதத்துடன் இணைந்து (நாம ரூப, ஜக ஜீவ, குண தோஷ, த்வைதமல்ல) அதாவது சூட்சும நாமரூப, ஸ்ரீ பகவானுடன் இணைத்து, முன் சொன்ன மாசுபடாத, அத்வைதத்துடன் "தானாய் தனித்திருக்கச் செய்து விட்டு!

முன் சொன்ன, சிறிது மாசுடன் கூடிய த்வைதத்தை தள்ளிவிடலாம்! தள்ளிவிடலாம் என்பது, உபசார வசனமே! அங்கு அந்த த்வைதம் தானே மறைந்துவிடும்! அங்கு அதுவும் நீராகி விடுவோம்.

↑ தாரணை அங்கு "கற்பனையின் மணம்" "இருக்காது! "அறிவு" ஒன்றே இருக்கும்! அந்த அறிவும் முழுவதும் "பேரறிவாக" (அகண்ட பாவனையாக) மாறிவிடும்!



உ

(17)

கடைசி கேள்வி :— தாங்களோ இறைவனாகவும், குருவாகவும், இருந்தாலும், அனேகநிலைகளில், அனேக இடங்களில், ஸ்ரீபகவானுக்கே, முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். அதன் காரணத்தையும், சற்று உணர்த்துங்கள்? எனமுடித்து விட்டாய் போலும்?

பதில் :— இது ஸ்ரீபகவானுக்கே, ஓர் உண்மைபக்தன், வைக்கும் "பரீக்ஷை" போன்று ஆகும்!!!!!!! அவனே சொல்கிறான் கவனமாக கேளுங்கள்!

"ஸ்ரீபகவான் வாக்கியம்!"

ஓர் "ஸத்குருவை" பிரார்த்தும் வணங்கப்படும் "அந்தஒன்றே" ஆன, ஆத்மானந்த நிலைகளே! பக்குவப்படாத உள்ளங்கள், இப்படி அதி ஆழமான! அதிஅதி தெளிவான! கேள்விகளைக், கேட்க முடியாது தான். உங்கள் ஸத்குருவால், ஆத்மானந்தம், அடைவீர்களாக! உங்கள் ஸத்குருவின், அனுபவ வாக்கின்படியும், முந்தைய ஸ்ரீமஹான்களின், அனுபவ வாக்கின்படியும், இக்கலியுகத்தில், ஸ்ரீபகவத் சொரூபமும், ஸ்ரீபகவன் நாமாவும், மறைந்தே ஆகவேண்டும்! அறவ் தெளிந்த உள்ளங்களில், அதுமே பிரகாசிக்கும்! கலிதோஷ வாசகமும், கலிதோஷ ஆட்சியும், ஸ்ரீபகவன் நாமாவுக்கும், ஸ்ரீபகவத் சொரூபத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காது!





உ

அதைப்போலவே, இன்றைய கலியுக
ஸ்ரீமஹான்களும், ஸ்ரீபகவன் நாமாவை
யும், ஸ்ரீ பகவத் சொரூபத்தையும்,
வியாபாரமாகவும்! விளம்பரமாகவும்!
பயன்படுத்த வேண்டுமென்பதே நியதி! அறவே விதி!

ஆகவே, இக்கலியுக, அத்வைதிகளும், "மாயா" என்றால் "ஸ்ரீபகவான்" என்றும், "ஸ்ரீபகவான்" என்றால் "மாயா" என்றும்; விசார ஞானத்தால், நாம் ஆத்மாவே என்றும், நாம் பிரம்மமே என்றும், நாம் பரமாத்மாவே என்றும், நாம் காலாதீத அந்த ஒன்றே என்றும், சந்தேக தயக்க பயமின்றி இருந்தால் போதும், என அத்வைதத்தை போதிக்கிறார்கள்! ஆனால் அவர்கள், சாதிப்பதில்லை! அவர்கள் சாதிக்க இயலாது! காரணம், "பிரபத்தியே" "சேவையே" சேவை சேவை என்று, ஈடுபடுவதால், அவர்கள் மாயா மனதினால், கர்மாவிலேயே பிணைக்கப்பட்டு அவர்களை நம்புகிறவர்களையும் கர்மாவிலேயே ஆழ்த்தி விடுகிறார்கள்! "மாயா" வேறு! "ஸ்ரீபகவான்" வேறு எனப் பிரித்துப் பார்க்க முடியாதபடி, "காமிய கார்ய கர்மா", அனைவரையும் பிணைத்துக் கொண்டது! இங்கு அவர்களை, குறை கூற முடியாது! குறை கூறக் கூடாது! குறை கூற இயலாது! இது கலியுக பெருமையும்! கலியுக மஹிமையும் ஆகும்! கலியுக தர்மமும் ஆகும்!



?

உங்கள் ஸத்குரு ஸத்திய வாக்குப்படி,
ஸ்ரீபகவானும்! ஸ்ரீ ஸத்குருவும்! ஒன்றே!

ஆனால் ஸாமான்ய குருவும்!
ஸ்ரீபகவானும்! ஒன்றாக முடியாது!
ஸாமான்ய குருவிடம், ஸ்ரீபகவான் உண்டு! இருப்பான்
ஆனால் ஸ்ரீபகவான், இயங்க முடியாது! இயங்க இயலாது!

காரணம்? "ஸ்ரீபகவானிடம்" மனம் இல்லை!
"ஸாமான்ய குரு"விடம் மனம் உண்டு!

ஓர் ஸத்குருவிடமும்! ஸ்ரீபகவானிடமும் "மனம்"
இல்லாத தன்மையாலும், அறிவே "ஆத்மா"வாக
பிரகாசிப்பதனாலும், இவ்விருவரும் "ஒன்றாக"
மட்டுமே, ஆத்ம ஞானம் பிரகாசிக்க முடியும்!

இங்கு "ஒருவர்" மட்டுமே, ஆத்மஞானம் பிரகாசிக்க
பண்ண இயலாது! பண்ண கூடாது! பண்ண முடியாது!

காரணம்? "மனம்" அழிந்து, மறைந்தாக வேண்டும்!
வினையும் நாசமாகி அழிய வேண்டும்.
"மனத்திற்கு" ஸத்குருவின் ஞான விசாரணை!
வினைக்கு, ஸ்ரீபகவானின் நாமரூப குணதோஷ வினை
சர்வநாசம் ஆகும்! இது தான் சம்பந்தம் ஆகும்!



மனதினால் "வினையின்" பின்னலும்,
வினையினால் "மனதிற்கு" தோஷ குணங்களும்,
பின்னிப்பிணைவதால் ஜனனமரணம் உண்டாகிறது!
வினை (தூலத்தின்) யின் பிணைப்பு நாமரூப ஜகத்தில்,
நான்! என்றும்! என்னுடையது! என்ற, அஹங்கார அதிகார
அபிமானத்தால் தோன்றும் "மனமுடிச்சு" ஆகும்!
"மனதின்" பிணைப்பு நாமரூப ஜகத்தில் பழக்க
வழக்க "தோஷ" குணங்களின் இணைந்தது ஆகும்!
ஆகவே??? "ஒன்றே"!
நாமாதீத பர சொரூபமான அந்த
பரசொரூப அம்சமான "ஸத்குரு" ஆகவும்,
" " "பகவான்" ";
இணைந்து, செயல்பட்டால்தான், ஆத்மஞானம் பிரகாசிக்கும்!
வினை என்ற நிலையில் தூல இயக்கமாகவும், மனம் என்ற
நிலையில் அவ்வினைதூலத்தை இயக்கும் சூட்சும கயிறாகவும்
அவ்வினையையும்! அம்மனத்தையும்! திட்டமிட்டபடி
திட்டமிட்ட காரியங்களை, அறையமாக இயக்கும் நிலையில்
"மாயாவை" வைத்துக்கொண்டு சூத்திரமாக
இயக்கும் ஸ்ரீபகவானாகவும், அதுவே இருக்கிறது என உணர வேண்டும்!
(சூத்திர தாரியாக)



உ



இங்கு மாயாவையும், ஸ்ரீபகவானையும்,
ஒன்றாக இணைக்கவோ, பிணைக்கவோ,
கூடாது! முடியாது! இயலாது! இது
ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!
ஸ்ரீபகவானின் "கருணையே" மாயாவாகும்.
கருவி பகவானாக முடியாது! கூடாது! இயலாது!
ஆனால்??? "மனம்" என்றால், ஜீவனாகவும்,
(மனதின் எண்ணமே)
"ஜீவன்" என்றால், மனமாகவும் கொள்ளலாம்!
மன எண்ணமே ஜீவன்! மன எண்ணமற்றால் நீ ஆத்மாவே!
இந்த மன எண்ணம், அற்றுப் போவதற்கு?
"வினை"யின், தாவ இயக்கத்தை "மனதால்"
முன் கூறிய, நிலையில் சமர்ப்பணமாக விட்டால்,
உலகம், உன்னை ஒதுக்கமாய், தள்ளிவிடும்! அங்கு உன்
ஸ்ரீபகவான், உன்னை அவஸ்யம் ஏற்றுக் கொள்வான்!
அறியாமையால் "ஜீவன்" என ஆன உன்னை,
ஸ்ரீபகவான், ஏற்றுக் கொண்டால்தான் "வினை" நாசமாகும்.
வினை நாசமடையும் போதுதான், மனம் பாரம் இலேசாகி
குறைந்து குறைந்து மறையும்! மனம் லேசாகும் போதுதான்
உன் ஸத்குருவின், ஆத்மஞானபாடம் "மனதால்"
அநுபவத்தை கொடுத்து, மனதை மறந்தாலே!
மனம் மறைந்தால், நீ ஜீவன் முக்தனே! இது ஸத்தியம்!



உ

உங்களுடைய, ஸத்குருவானவர்,
தேவ தெய்வ அம்ஸமாக இராமல்
"பராசொரூபமாகவே"
இருப்பதால், தாம் இயங்க முடியாமலும்;
இயங்க இயலாமலும்; இருக்கும் தன்மையினால், நம்
அடுத்த நிலையாகிய "ஸ்ரீபகவானின்
மாயாவை" ஏற்காமல், உங்கள் அனைவருக்காகவும்
"பொறுமை", "அன்பு", "கருணை"
இவைகளின், அடிப்படையில் ~~ஸ்ரீ பகவானின்~~ "விளையாட்டை"
மட்டும், ஏற்றுக்கொண்டு, இம்மறை கனியைப் போல்,
"உங்கள் உருவத்தை"யும்,
நம் நிலையில் தான் தணிந்த "உருவத்தையும்",
இருக்கும், உங்கள் ஸத்குருநாதனை, யானும் வணங்குகிறேன்.
மேலும், அவன் நிலையில் அவனேயாமாகவும்; யாமே
அவனாகவும்; "இருப்பும், இயக்கமும்"
இருப்பதால், எம்மையும், அவனையும், "தனித்து யே"
பிரித்து காணவும் முடியாது, அறியவும் முடியாது,
உணரவும் முடியாது, இது தேவ பிரம்ம ரகசியமாகும்.



௨௩

உ

மேலும், அவன் இல்லையேல், யாம் இல்லை!

யாம் இல்லையேல், அவன் உண்டு!

அங்கு வாக்கால் விளக்கவோ,

வரியால் துவக்கவோ, முடியாத நிலையில்

"அவன்" (அது) அவனாக (அதுவாக)

"தனித்திருப்பான்" (தனித்திருக்கும்)

அவனை உள்ளபடி உணர்ந்தால் அது எம்மைக் (ஸ்ரீபகவானை)

காணும் நிலையாகும்!

அவனை, உங்கள் நிலையில், கண்டால், உங்களுடைய

"மனத்திரையே" (எம் மாயையல்ல)

உங்களை (நான்) அஹங்கார, (என்றல்) அதிகார, (என்னுடையது) அபிமானங்களால்

(உங்களால்) (கப்) மறைபடுகிறதென உணருங்கள்!

"குறையும், திரையும்" உங்கள் மனமே!

யாவும் ஸ்ரீபகவானும் மறைக்கவுமில்லை

பரமும் ஸத்குருவும் " "

இதுவே பரமான உண்மை, இதுஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

இவ்வாறு ஸ்ரீபகவானின், திருவுரையை முடிந்தான் (கண்ணன்)!



(ஓம்)

உ

ஸ்ரீ பகவானுக்கு, ஓர் உண்மை பக்தன், வைக்கும் "**பரீட்சை**" என்று ஏன் ஸ்ரீ பகவானை சொல்கிறேன் என்றால்? உங்களின், அறியாமையின் குணங்களை நான்! என்றல்! என்னுடையதை! உங்களால் விட முடியாமல்; அதாவது அந்த குற்றம் "**உங்களுடையதை**" உணர்ந்து விட முடியாமல், உங்கள் ஸ்ரீ பகவானையும்! உங்கள் ஸத்குருநாதனையும் "**திரையிட்டு**" (ஓம்) க்கிறீர்கள் என்றும்; மறைந்திருக்கிறீர்கள் என்றும்; மூர்க்கவன சக்தியுடனும் தற்காப்பு சக்தியுடனும்! "**குற்றம் குறை**"கள், "**பிறர் மீதே**" சுமத்தி, அமத்தி, சுமத்தி, பழகிய பழக்கம், பழக்க தோஷ குணமானது, இன்னமும் விடவில்லை போலும்??? ஸ்ரீ பகவானுக்கே, யாம் ஏன் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்றால்??? ஸ்ரீ பகவான் வேறு! யாம் வேறல்ல என்பதே ஸத்தியம்! யாம் இயக்கமற்றவன்! ஸ்ரீ பகவான் இயக்கம் உற்றவன்!

கேள்வி:- ஹேபாபா! உங்கள் வாக்கே, வேத, தேவ வேதாந்த வாக்கு என்பதை பிரமாணமாக நம்புகிறோம்! தாங்கள் எங்களை வழிநடத்திச் செல்லும் வழிகாட்டியும் கைகாட்டியும், ஆவீர்கள் இதுவே ஸத்தியம்!



உ



கேள்வி:— எல்லாம் அவன் பொருள்!
என்றும், எல்லாம் அவன் செயல்!!
என்றும், அவனன்றி அணுவும் அசையாது!!!
என்றும், நாங்கள் கூறும் வாக்கை
அப்படியே நம்புகிறோம்! நடக்கிறோம்!
ஆனால் அந்த "வாக்கு அனுபவ" நிலையில்,
அடிக்கடி, நாங்களே கூறுவது தான், ஒவ்வோர்
"சமயம்" "வியப்பாகவும் இருக்கிறது?
சந்தேகமாகவும் தோன்றுகிறது??
"நாங்கள்" சொல்லும் வாக்கை,
நீங்கள் சொல்லக்காரணம் என்ன?

பதில்:— ஓர் நிலையில் "சேய்நோய்க்கு
தாய்" மருந்து உண்பது போல்! உங்களுக்காக
யாம் சொல்லி, உங்கள் அறியாமையை போக்குகிறோம்,
போக்கிக்கொண்டிருக்கிறோம்! போக்கி விட்டோம்!
என நம்பவும்!
ஓர் நிலையில் யாம் ஓர் "மாயவனே"!
இன்னமும்
யாம் போதிப்பவனல்ல! யாம் சாதிப்பவனே!
எம் சாதனையே, உங்கள் அனைவர்க்கும், ஸ்வய
"அனுபவமாக" முடியும், இது சத்தியம்.
காலம் போக்கில், நம் அன்பர்கள், அனைவரும் உணர்வர்!
அவர்கள் உணரும் நிலையில், காலத்தை கடந்து
காலாதீத ஒன்றாகி விடுவார்கள்
ஜீவன் முக்தராகி விடுவர்.



உ

இதை உணரவும்!

அத்வைதம் என்றால், "ஒன்றே"

அன்று யாம் கூறும் பகவானும்! ,,

அன்று காவாந்த பரமாப்பேயும்! ,,

இன்று இந்த ஸத்திய வாக்காக கூறும்.

யாமும்! (கேட்டும்) நீங்கள் அனைவரும்! அந்த ,,

இதுவே பிரமாண உண்மை. ஆனால்

அந்த "ஒன்றை"! உங்கள் அனைவர்க்காகவும், சுட்டிக் காட்டும் நிமித்தம், கூறும் கதைகளும். விளக்கங்களும், "துவைத"மாக இருப்பதால் தான், துவைத கற்பனையால் தோன்றிய "மனம்" நாசமாகி, அது மறைந்தாகி, இரண்டற்று! அதாவது துவைத பயமற்ற! அதாவது நமக்கு அன்னியம் எதுவுமே இல்லாத! அந்த "ஒன்றாக" நீங்கள் ஆக முடியும்!

(1) துவைதம் படிக்கட்டுகளாகும்! அத்வைதம் மாடியாகும்! படிகள் மாடி ஆகாது! ஆனால் நீ ஏறி விடுவாய்!

(2) துவைதம் ஓர் படகு ஆகும்! அத்வைதம் கரை ஆகும்! ஓடம் கரை ஆகாது! ஆனால் நீ கரை ஏறி விடுவாய்!

இவ்விரு நிலைகளிலும், ஸ்ரீ மெய் அன்பர்களின் பாதம் தாங்கும், சேவையே மறைந்தானதாகும். இங்கு எம் ஸிவய அனுபவமே, மெய் அன்பர்களுக்கு பாடம் ஆகும்!



உ

(27)

# "பணிவே பாதையாகக் கொள்" என்றால்,

பணிவின் இலக்கணம், என்னவென்றால்?

மரியாதையை கொடுத்துத்தான், மரியாதையை வாங்க வேண்டும்! மரியாதையை வாங்க முடியும்!

நாம் மரியாதை கொடுக்காமல், பிறரிடம் மரியாதையை, எதிர்பார்க்கவாகாது! அது கிடைக்காது

அது போல எண்ணம், சொல், செயலால், நாம் அடங்கினால், உலகம் அனைத்தும் நம் முன் அடங்கும்! இது நியதி இது ஸ்ரீமஹான்களின் ஸ்வய அனுபவமாகும்!

இரண்டு நிலைகளில் ஸ்ரீமஹான்களின், வாக்கிய வாசகம், எப்படி வருகிறது? என்பதை சற்று, அறிவு ஊன்றி கவனிக்கவும்.

## (1) "தெய்வம் மனுஷ்யாணாம்" என்றும், தெய்வம் (2) "தோன்றாத் துணைவன்" என்றும்,

வருவதில், என்ன ரகஸ்யம் மறைந்திருக்கிறது என்றால்?

(1) தெய்வம் மனுஷ்யாணாம்:- இக்கலியுகத்தில் மட்டும் அவரவர் உபாசனா மூர்த்தி, மனித வடிவில்தான் வரும்! வர வேண்டும்! இதை பக்குவ ஆன்மாக்கள் மட்டுமே உணர்வர். ஏனையோர் உணரார்! உணர முடியாது! இதுவே உண்மை! இதில் எல்லாம் அவன் பொருள் என்றும், எல்லாம் அவன் செயல் என்றும், அவனன்றி, அணுவும் அசையாது என்றும்,



உ

திட உணர்வுடன் கூடிய நம்பிக்கை உள்ளவர்களுக்கே இது சாத்தியமாகும். இவர்களுக்கு "**இருப்பும் இயக்கமும் பொருள்களும்**" ஸ்ரீபகவானுக்கு அன்னியமாய், இல்லாத தன்மையிருக்கும் இவர்களுக்கு "**மனத்திரை மறைப்பில்லாத**" தன்மையிருக்கும்; ஸ்ரீபகவானின் கை கருவியாகிய, "**மாயா**" செயல்பட இயலாத் தன்மையிருக்கும்; மாசுமறுவற்ற கண்ணாடியில், நம் உருவத்தை, எப்படி நிதரிசனமாக, காண்கின்றோமோ? அவ்வாறு, ஸ்ரீபகவானையும், "**பிரத்தியக்ஷமாக**" காண முடியும்! உரையாட முடியும்! உறவாட முடியும்! அங்கே மனக்கண்கள் அல்ல! அங்கு அறிவுக்கண் ஆகும்! இது இந்த ஏழை "**வைத்தியத்தின்**" ஸ்வய அனுபவமாகும்!

(ஸ்ரீபகவானுக தோன்றும் ஏதோ)

௨) தோன்றுத்துணைவன்:— நேரில் தோன்றுத ஓர் வடிவத்தில் தோன்றுபவன்! ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன, ஆகிய இந்த, நான்கின் நிலையிலும் உனக்கு "**உள்ளின் மனம்**!" இவற்றின் நிலை கண்டு ஸ்ரீபகவான் நேரிடை உபகாரம் பண்ணுவான். அல்லது ஓர் அபகாரத்தை காட்டி, பின் பின்னின் உபகாரம் பண்ணுவான்.



இங்கு உன் மனம், ஏதேனும் எதிர் பார்ப்பிலேயே, ஊறிப் போயிருப்பதால், உன் மனதிற்கு ஏற்ப, ஓர் "மாற்றத்தை" காட்டி "ஏமாற்றத்தை"! உண்டு பண்ணக் கூடியவன், தோன்றாத் துணைவான்! இங்கும், உன் சாதனையானது :- எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்! அவனன்றி அணுவும் அசையாது! என்ற "திட" உணர்வுடன் கூடிய "நம்பிக்கை" மட்டும் இருந்தால், உனக்கு இருப்பும்! பொருள்களும்! எல்லாம் இல்லாமல் இயக்கமும்! அவனுக்கு "அன்னியமாய்" இல்லாத தன்மையாயும், அங்கு உன் நம்பிக்கையால், ஸ்ரீபகவானின் "மாயா" செயல்படாத் தன்மையாயும், உன் அறியாமையின் "மனத்திரையும்"! செயலற்றுப் போன தன்மையாயும், மாசு மறு அற்ற நிலை கண்ணாடியில், நம் உருவத்தை எப்படி துல்லியமாகக், காண்கின்றோமோ, அப்படி, ஸ்ரீபகவானையும் நேருக்கு நேர், "பிரத்தியட்சமாக" காண முடியும்! உரையாட முடியும்! உறவாட முடியும்! இங்கு காண்பது, "மனக்" கண்கள் அல்ல! "அறிவுக்" கண் ஆகும்! ஸ்ரீ மஹான் கஸ்ரேன், ஸ்வயம் அனுபவ நிலையில், இந்த ஐக்கியத்தின், அனுபவமாகும்!



ஓம்

உ

# "யத் பாவம்" "தத் பவதி"

என்றுவே, உன்னை, எது எதுவாக, எப்படி எப்படி, பாவனை பண்ணுகிறாயோ. அது அதுவாக, அப்படி அப்படி, ஆகுவாய்! என்பதே பொருளாகும். இந்த வாக்கியத்தில், ஓர் உண்மை, மறை பொருளாக, மறைந்திருப்பதையும் உணரவும். அதாவது இவ்வாக்கியம், யத் பாவம் **"தத்"** பவதி என வருவதை கவனிக்கவும்.

தத் என்றுவே, **"தத் பத"** சொரூபமாகிய, ஈசநிலயாகிய, **"பரமாத்மாவை"** குறிப்பதாகும். இதிலிருந்து, என்ன உணர்கிறோம் என்றால்? திரிகர்த்தாக்களையோ, உன் **"உபாஸ"** மூர்த்தியாகிய, ஸ்ரீபகவானையோ, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம். செய்யும், **"கர்த்தாக்களாக"** காணவும் வேண்டாம்! கற்பனை பண்ணவும் வேண்டாம் என, பிரமாணமாகச் சொல்கிறோம்! திரிகர்த்தாக்களையும், உன் உபாசன மூர்த்தியையும், உன்னுடைய **"ஸத்குருவாக"** காண்பாயாக! உணர்வாயாக! இதுவே யத் பாவம் தத் பவதி ஆகும்!



காரணம்? உ

குருபிரம்மா! குருவிஷ்ணு! குருதேவோ
மஹேஸ்வரஹ! என ஸ்ரீமஹான்களின்
அனுபவ வாசகம் இருப்பதால்
"எல்லாம் ஒன்றே"
என்ற நிலையில், பரசொரூப அம்சமான,
ஸத்குருவாக உணரப்பழகிக் கொண்டால் நீங்கள்
ஸத்சிஷனையும் ஆககூடியும்! இதனால் உங்கள் அறியா
மையான, அதாவது கவனக்குறைவால் வந்த "ஜீவ
பந்தம்" ஒழிந்து நாசமாகும்! நான் ஒர் குருபி
என்ற, ஜீவ கர்த்தத்துவமும் ஒழிந்து நாசமாகும்! ஸ்ரீபகவானை
யும், திரிகர்த்தாக்களையும், ஸத்குருவாக பாவனையில்
உணரும்போது "ஈசபந்தமும்" அவர்களுடைய
ஈசகர்த்தத்துவமும், ஒழிந்து நாசமாகும்! வெளிக்கமாகிய
ஜீவகர்த்தத்துவமும்! தெய்வீகமாகிய ஈசகர்த்தத்துவமும்!
ஒழிந்து நாசமானால், மாயா (யுக்தும் மாயா) மனம் இருக்கும் இருப்பும்
இல்லை இயக்கமும் இல்லை! அங்கு இருப்பது "ஒன்றே"
அது நாமே! நாமே அது! என சும்மாவே சுகமாக
இருக்கவாமே!
உன் "மனமே" உள் நிலைக் கண்ணாடியாகும்!
அதில் "மாசு" எனச் சொல்லும் தோய்ந்த அழுக்கை
உன்னை உள்ளபடி காணவொட்டாமல் மறைக்கும் திரையாகும்!



மனஅழுக்கு என்பது, ?

நான்; என்னுடையது; என்ற நினைவில், குற்றம் குறை, பேதம், விருப்பு வெறுப்பால் வரும் "எண்ணம்" ஆகும்! அவ்வழுக்கை, கழுவி சுத்தப் படுத்தும் (கங்கா) ஜலமே உன் "கண்ணீர்" ஆகும்!

அம்மன நினைவுக்கண்ணாடியை, கழுவிய உடன், அதில் துல்லியமாக, இயல்பாக, ஸ்பஷ்டமாக, எந்த மறைப்பும் இன்றி, தெரிவது "உன் உருவம்" எனச் சொல்லும், உன் "அறிவாகிய" ஸ்ரீ பகவானே ஆம்!

அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு! அறிவே பகவான்! பகவானே அறிவு! நீயே பகவான்! பகவானே நீ! இதுவே ஸத்தியம்! யாம் முன்பு கூறியபடி, நீயே உன்னை உள்ளபடி காண, வேறு எந்த தடையுமில்லை!

இதைத்தான் "அழுதால் உன்னைப் வினையேன் பெறலாம்" என்றார்கள் நம் அனுபவ ஞானிகள்!

மேலும் இதை ஸ்ரீ அனுபவ ஞானிகள், எப்படி கூறுகிறார்கள் என்றால்? அழுதால் உன்னைப் பெறலாம்! என்றும், உன்னைப் (ஸ்ரீ பகவானைப்) பெற்றால், அது ஆகலாம்! என்றும், அது ஆனால் ஆனந்தத்தால் சிரிக்கலாம்! என்றும்,

ஆகவே அழாமல் சிரிக்க முடியாது



என்றும், "பக்தி"யினால், உருகி கரைந்து "அழு" என்றும், அழுகையின் முடிவு, பிரம்மானந்தத்தின் ஆனந்த "சிரிப்பு" என்றும், அனுபவ ஞானிகள் கூறுவர். இதைவிட என்ன உணர்கிறேன் என்றால்? சர்வ வியாபியான, "பரம்பொருள்", சர்வக்ஞனான, உன்னுடைய "ஸ்ரீபகவானே", ஆகும்! அவன் வேறு எங்கும் இல்லை! அவன் உன் மனக்குகையிலேதான், வாசம் செய்கிறான். அவனை, உள்ளே தேடி உணராமல், வெளியே தேடி அலைவது, அஞ்ஞானம் என்ற அறியாமையாகும்.

"நான்கு" யுகங்களிலும், உள்ள ஸ்ரீமஹான்களின் அனுபவ, சத்திய வாக்கு, எப்படி இருக்கிறது என்றால்? வெளக்க "ஜீவ" நிலையில் நான்! என்னால்! என்னுடையதை! விடாத நிலையில், தன்னுடைய பாடம் படிப்பு, பயிற்சி, முயற்சி, செயலாற்றல், அறிவாற்றல், வித்துவம், பாண்டித்யம், மற்றும் பற்பல கலைகளை, எடுத்து உரைத்தாலும், எடுத்து வரிவடிவில் எழுதினாலும், அது "தான் பெருமையும், தற்புகழ்ச்சி" என்ற நிலையில், கர்மாவையும் பெருக்கும், அழிவையும் உண்டுபண்ணும்! "நான்" பிறவியும் உண்டு! ஆகவே ?????





# உ

நான்! என்றல்! என்னுடையது! ஆகிய
இம் மூன்றும், அழிந்த நிலையில்,
குற்றம் குறை! பேதம்! விருப்பு வெறுப்பு!
முழுமையாக, அழிந்த நிலையில்,
"ஸ்ரீபகவான்" சம்பந்தமாகவும், தாவாத்ம
"பரசொரூபமாகவும்"! வரிவடிவமும்,
வாக்கின்நிலையிலும், ஓர் உண்மை "சாதகனி
டம்" வருமாயின், அது தற்பெருமையும் ஆகாது!
தற் புகழ்ச்சியும் ஆகாது! கர்மாவையும் பெருக்காது!
அதையும் உண்டு பண்ணாது! அங்கு ஜனன மரண முடிவே!
தாவாத்ம அதுவே! தாவத்தை கற்பிதம் பண்ணிக்
கொண்டு! "அவனை" ஸ்ரீபகவானாகவே
செயல்படுவதால், அது "அற்புதங்கள்"
ஆகும் என, அநுபவ ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்!
ஆகவே எம் ஆனந்த குழந்தைகளே! "படிப்பற்று!
"கேள்வியற்று"! "பற்றற்று"!
ஏக்க "தாழ்ப்புடன்" "இதய
ஏகம் ஆகி! அகமாகி! அதுவாகி!
சும்மாவே சுகமாக இருக்க வாரும்!

உ

# பொது விதி



"நீ கொடுத்ததை வாங்க வேண்டும்!"
"நீ வாங்கியதை கொடுக்க வேண்டும்!"
"நீ கொன்றவைகளே, உன்னை கொல்கின்றன!"
"நீ தின்றவைகளே, உன்னை தின்கின்றன!"
"நீ பாதுகாத்தவைகளே, உன்னை பாதுகாக்கின்றன!"

"ஆகவே இவ்வுலகம், பற்று வரவு தீர்க்கும், ஓர் கர்மபூமியாகும்!" "நம்பிக்கையே பக்தியாகும்! வைராக்கியமே ஞானம் ஆகும்!" "விருப்பும், வெறுப்பும், ஜனனமரணமாகும்! போதும் என்ற நிறைவே மோட்சத்தின் திறவுகோலாகும்! "பேதமே ஜகத் தோற்ற நாமரூபமாகும்! "எல்லாம் மண்ணே என்ற, அபேதமே, மோட்சத்தின் வாசலாகும்!" "குற்றம் குறைகளே விகாரமும், விவகாரமும், (பிரச்சனைகளும்) ஆகும்! "எல்லாம் இயக்க நிலையில், அவனுக்கு (ஸ்ரீ பகவானுக்கு) அன்னியமில்லை என்றும். "இயக்கம் அற்ற நிலையில், அந்த ஒன்றுக்கு (பரசொரூபத்திற்கு) அன்னியமில்லை என்றும் உணர்வதே ஞானம் ஆகும்! "பக்தி என்றால், நாமரூபம் உள்ள, ஓர் ஸ்ரீ பகவானிடம், எல்லாம் நீயே என்றும். எல்லாம் உன்னுடையதே என்றும், விட்டு விடு! "ஞானம் என்றால், எல்லாம் ஒன்றே என்றும். அது ஆனந்தமே என்றும்: அது நாமே! நாமே அது! என்றும். பரிபூரண நிறைவோடு இருப்பதே, ஆத்ம ஞானம் ஆகும்!

வாக்கே, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளாக, இருக்கிறது என்பதே, ஸத்தியம். வாக்கை அடக்கு என்று, சொல்வதை விட, வாக்கை குறை, எனச் சொல்வதுவே பொருத்தமானது. வாக்கை குறைப்பது என்றால், சுருக்கமாக பேசு. இதமாகவும், மிதமாகவும் பேசு. அப்படி பேசுவதை, இறை குரு, உணர்வுடன் பேசு. வாக்கே அக்னியாகவும். வாக்கே வாழ்க்கையாகவும் அமைகிறது. உன் வாக்கே, உனக்கு காவலாகவும், அமையும் வாக்கால் அடங்கினால், உலகம் அடங்கும்! வாக்கால் அடக்கினால் உலகம் உன்னை, அடக்கி அழித்துவிடும்!



உ



காண்பதையும், காதால் கேட்பதையும், அப்படியே, உண்மை யென, நம்பி விடாதே! ஒன்று, நடைபெற வேண்டியதற்கு, அது காரணமாக அமையும். அவ்வது நடந்து முடிந்த செயலின், விளைவுகளாக அமையலாம். இறைகுரு உணர்வுடன், சற்று பொறுமையாக, காத்திருந்தால், அதன் உண்மை, தானே வெளிப்படும். ஆத்திரம், அறிவு நாசம் என்பது, இங்கு பொருந்தும்! இங்கு, ஆத்திரமும், வேகமும், அவசரமும், கெடுக்கப்படவேண்டும். ஒருபக்க, விளைவுகளை கண்டு, உடனே முடிவெடுக்காதே! மறுபக்கம், திரும்பும் வரை, சற்று பொறுமையாக, காத்திரு. நடப்பது, நலமே என்ற, உணர்வுடன், பொருந்திருந்தால், நலமாய் முடிவதை, நீயே உணர்வாய்!

போதும் என்ற, மன நிறைவு, ஸ்ரீபகவான் தரமுடியாது. தர இயலாது. அம்மன நிறைவு, மனதின், காரண காரியமாகும். ஸ்ரீபகவானிடம், மனம் இல்லை. அவன் அறிவு சொரூபமானவன். நீயோ, மனவசப் பட்டவன். ஆகவே மனநிறைவை, நீதான் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி என்றால், ஆகாரம் சாப்பிடும் ஒருவன், தேவைக்கு மேல், வரும் ஆகாரத்தை, போதும், போதும் என, நிறுத்தி விடுகிறான். ஆனால் தேவைக்கு அதிகமான, பொன் பொருள், ஆபரணம், பணம், இவைகளில், அதிகமாக ஆசை கொள்கிறான். காரணம் ஆகாரம் உள்ளே செல்கிறது. ஆகவே, அது போதும் என நிறைவைக் கொடுக்கிறது. ஆனால் மேலே சொன்ன, பொருட்களோ வெளியே இருந்து, மயக்குகிறது. ஆகவே எவர்க்கும், போதும் என்ற, திருப்தி ஏற்படுவதில்லை, அதேபோல்



ஸ்ரீ பகவத் சொரூபத்தையும், ஸ்ரீ பகவந்
நாமாவையும், உருக்கத்துடனும், ஏக்
கத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும்,
உள்ளே (நம் இதயத்தில்) வைத்துக்
கொண்டால், பூரண நிறைவும் உண்டாகும்.
வெளிப் பொருள் நாட்டமும், வராது
அழியும்! இது இந்த ஏழையின், அனுபவமாகும்!

ஸ்ரீ பகவந் பக்தி என்பது, பூஜை புனஸ்
காரம், அபிஷேகம், ஆராதனை இல்லவே இல்லை.
அவை புறச் செயலாகும். அதில் ஸ்ரீ பகவானுக்கு
பிரீதி இல்லை. அவனிடம் மனம் இல்லை. ஆனால்
உன்னிடம், மனம் இருக்கிறது. உன் மனதையே,
அவன் அமர, கோவிலாக கேட்கிறான். உன் கண்ணீ
ரையே, காணிக்கையாக கேட்கிறான். உன் கண்ணீ
ரே, உன் உள்ளத்தை, கழுவும் புனித கங்கை ஆகும்.
உள்ளம் உருகி அழுது, உள்ளத்தை தூய்மையாக்கி,
அதில் அவனை, அமர வைத்து விட்டால் உன் தேவை
களும், ஆசைகளும், நிலையறிந்து, நடைபெறும்.
அங்கு அவன் கைகள், தோன்றுது. நிலைத்த ஆனந்தம்
நிலைத்து நிறைந்து நிற்கும்!

இவ்வுலக நாடக மேடையில், அனைத்து ஜீவர்
களும், அவரவர், வினைகளை, திட்டமிட்டு, வகுத்துக்
கொடுத்தபடி, பாரபக்ஷ தோஷம் இல்லாமல் விதி
தாச்சூரப்படி, ஒழுங்காக நடைபெறுகின்றன.
இங்கு, "நான் என்னுடையது", எனமுண்டியடித்துக்
கொண்டு, அவசரம் என்ற நிலையில், வேகத்தோடு
செயல்படுவதால், கர்மா விகாரம் அடைகிறது.
கர்மா பெருகிறது. கஷ்டம், கவலை, பயம், துக்கம்
என தோன்றுகிறது.





நான். என்னுடையது என்ற. அஹங்கார அபிமானங்களை விட்ட நிலையில், ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு இவை இல்லா தொழியும். இந்த நிலையில், இறை! இரு! இதனை ஓர்மையாகும். அகலாது நிலைத்து நிற்கும். அங்கு நாம ரூப, குணம் குறை, கோடிங்கள் நசித்த படியால், எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என்ற சாந்தியினும், அமைதியின் ஆனந்தத்திலும், மனம் நிலைத்து நின்று, அதுவே நாம்! நாமே அது! என்ற பரசொரூப ஸ்திதி, அநுபவத்திற்கு வரும்! அதுவே, ஆத்ம ஞானம் என்ற ஜீவன் முக்தி ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்!

மனம் இல்லாமல், நாம ரூப, ஜக ஜீவ இயக்கம் இல்லை!
இதை வழி முறையாக, சொல்வது என்றால்?
வினை இல்லாமல், மனம் ஆடாது. மனம் இல்லாமல், விதி ஆடாது!
விதி இல்லாமல், உலகம் இயங்காது, என்பதே ஸத்தியம்!
வினை என்றால், புண்ணியம் பாவம் என இரண்டாகும்!
மனம் என்றால், கோடானு கோடி, எண்ணங்களாகும்!
இவ்விரண்டையும் வைத்து, இயக்க நிலையில், திட்டமிட்ட காரியங்களை, திட்டமிட்டபடி, ஒழுங்காக ஆட வைத்து, தாம் எதிலும், பற்றப்படாமல், சாட்சி பாவனையில், ஆட்டத்தை ரசிப்பவன், விதி என்ற கால தேவனாகும்! இந்த வினை, இதை மனம், விதி, இம்மூவரின் இயக்கமானது, ஒழுங்காக நடைபெறும் போது, எந்த உபாதைகளும், இல்லவேயில்லை! அதாவது கஷ்டம் கவலை துக்கம் துயரம், சந்தேகம் பயம், கலகம் கலக்கம், எந்த கோர குணங்களும், இல்லவே இல்லை. பின் இக்குணங்கள் தோன்றக் காரணம், என்ன வென்றால்? நான். என்னுடையது, என்ற அஹங்கார அபிமானமும் ஆகும். இவ்விரண்டிலும் அதாவது நான் என்றால் என்ற, அஹங்கார நிலையில் அதிகாரம்! ஆதிக்கம்! இவைகளால் குரோதம், விரோதம், ஆக்ரோசம் ஆவேசம், என்ற நிலையில் வரும் ஓர் வித, வெறித்தனமானது,



ஆட்டிப்படைக்கிறது. என்னுடையது என்ற, அபிமான நிலையில், உடைமை, உரிமை, சொந்த, பந்த, பாச, பிணைப்பிறவி உந்தப் பட்டு, மானவமானம், வெட்கம் சூடு சுரணை, லட்சை, என்ற அவமானச் சின்னங்கள், என்ற நிலையில், தொற்று நோய் விஷக் கிருமிகள், போல இந்த மனதால், பீடிக்கப்பட்டு ஒருவன் நிரந்தர நோயாளியாயும், ஜனனமரண பிணியாளராகவும், ஆக்கப்பட்டு விடுகிறான். ஆகவே இந்த நான், என்னுடையது, என்ற, இரண்டையும், விட்டால் போதும். பின் மனம் விதி இயக்கம், அமைதியாகவும், ஆனந்தமாகவும் அமையும் என, ஸ்ரீ ஞானிகளின் அநுபவம் இருக்கிறது.

ஜீவகர்த்தத்துவம் என்பது மனம் வசம் அகப்பட்டு, ஜீவன், நான், என்றல், என்னுடையது என்ற நிலையில், மமதைமய, வலுவான எண்ணத்தால், தம்மைத்தாமே, பிணைத்துக் கொள்கிறான். எப்படி என்றால் நான் செய்தேன். என்றும், என்றால் தான் முடிந்தது என்றும். நான் தேடியது என்றே, எங்கப்பன் தேடியது என்றே, எல்லாம், என்னுடையதே என்றும். இப்படி மூன்று நிலைகளில் பற்றிய கோடலி வாமல். நான் குடும்பி! நான் சம்சாரி! நான் ஓர் பந்த ஜீவன், என்ற நிலையில். என் கணவன், என் மனைவி, என் குழந்தைகள், இவைகளை, நானே காப்பாற்ற வேண்டும் என்ற, வலுவான எண்ணத்தால், தன்னையே தளையிட்டு மாட்டிக் கொள்வதே, ஜீவ கர்த்தத்துவம் ஆகும். இதை நான் அல்ல என்றும், என்றால் எதுவும் இல்லை என்றும். எதையும் என்னுடையது அல்ல வென்றும். எல்லாம் ஸ்ரீ பகவானுடையதே என்றும், எல்லாம் அவனே என்றும். அவனன்றி அணுவும் அசையாதென்றும், ஸ்ரீ பகவானிடம், சர்வார்ப்பணமாக மனதால் விடுவதே, பந்த நிவர்த்தியும், ஜீவ கர்த்தத்துவத்தை, அழித்த நிலையுமாகும்.



நான், என்றும், என்னுடையது என்ற நினை
யில் எண்ணத்தால், பற்றிய மனது,
எல்லாம் நீயே! எல்லாம் உன் செயலே!
எல்லாம் உன்னுடையதே என, சர்வார்ப்
பணமாக, விட்டு விட்டால் நாமரூப குண,
எண்ணத் தொடர்புகள், அனைத்தும் மனது, பற்று தொடர்
பும் தோடிகுணங்களோ, ஜனனமரணமாகும்!
குணத்த நிலையே பிறவா நிலையாகும்! விஷயானந்தத்தை
விடுவது என்றால், கோர குணங்கள், இல்லா தொழிய வேண்டும்.
பேரானந்தம் மறைவதானால், ஸ்ரீபகவானை, நாம் ஆக வேண்டும்.
பிரம்மானந்தம், நிறைவு பெற வேண்டுமானால், ஸ்ரீபகவானும்,
நாமும், ஒன்றான நிலையில், அதுவே நாம்! நாமே அது!
என்றத்வைதம் பெற வேண்டும்!

ஏ நன்றி கெட்ட மானிடப் பதரே! உனக்கு
நன்றி இல்லை! விஸ்வாசம் இல்லை! அறிவே இல்லையே! என்ன
செய்வோம்? ஸ்ரீபகவான் உனக்கு, உணவு கொடுத்தான்!
உடை கொடுத்தான்! இருக்க இடம் கொடுத்தான்! சேவை
க்கு, அழகான மனைவி கொடுத்தான்! பொன் பொருள் போகமும்
கொடுத்தான்! வாழ்க்கை வசதி கொடுத்தான்! வாரிசுக்கு
குழந்தை கொடுத்தான்! இவ்வளவையும், அதன் அனைத்து
பொருள்களையும், உனக்காகவே கொடுத்தானே! அவனை
ஒரு க்ஷணமாவது நினைக்கிறாயா? ஏன் இப்படி, வறண்டு
போய் விட்டாய்? கொடுத்தவைகளை திரும்ப திரும்ப,
எண்ணுகிறாயே! கொடுத்தவனை, ஒரு க்ஷணமாவது, எண்ணுகி
றாயா? இது உனக்கே, கேவலமாக தெரியவில்லை?
நன்றி கெட்ட நாயே! அறிவில்லாத பேயே! எது கிடைத்
தாலும், உடனே தெருநாய் போல், லபக், லபக், லபக், என
வாயில், கொட்டிக் கொள்கிறாயே! இது உனக்கு கேவலமாக
தெரியவில்லையா? உன் பாட்டன் சொத்தா? உங்கப்பன்
சொத்தா? இல்லை உன்னுடையதா? நீ என்ன கொண்டு வந்தாய்?



என்னத்தை, கொண்டு போகப் போகிறாய்?
பிறக்கும் போது, கோடானு கோடி ஆசைகளை,
அனுபவிக்க வேண்டுமென்ற, பேராசையால்,
கை விரல்களை, மூடிக் கொண்டே பிறக்கிறாய்?
சாகும் போது, ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!
யென கைவிரல்களை, விரித்துக் கொண்டே
சாகிறாயே. இருக்கும் ஆகாரமோ, பொருளோ, பிறருக்குக்
கொடுக்க மறுக்கிறாய்! உண்ணும் போதும், ஸ்ரீ பகவானை
எண்ணாமல் நாய் போல் தின்கிறாய்! உனக்காகத்தானே,
இந்நிலையும் படைத்தான். உனக்காகத்தானே உன் தேவை
யெல்லாம் கொடுத்தான். கொடுத்த ஸ்ரீ பகவானை, ஒரு கணம்
நினைக்கிறாயா? ஸ்ரீபகவான் உன்னிடம், என்ன கேட்கிறான்?
கொழந்தே!

(1) எல்லாம் எம்முடையதே! ஆனால் அவையனைத்தும் உனக்காகவே படைத்தோம்! நீ அனுபவிப்பதற்கே, அனைத்தையும் படைத்தோம்!

(2) அவைகளை தொடும் போதும், எடுக்கும் போதும், கொடுக்கும் போதும், வாங்கும் போதும், ஹே பகவானே! இது உன்னுடையதே. எல்லாமும் நீயே இருக்கிறாய்! உனக்கே அர்ப்பணம் என, சொல்லிவிட்டு, உபயோகிக்கலாமே!

(3) நான் என்றும்; என்னுடையது என்றும், அவைகளை அனுபவிக்கும் போது, உன் அஹங்கார, அபிமானத்தால், அப்பொருள், வினை யென்றும், பாவ மென்றும், விஷம் ஏறிக், கெட்டுப் போய் விடுகிறதே!

(4) அவைகள் கெடாமல், இருக்க வேண்டுமானால், எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையதே என, அவைகளை, நீ அனுபவித்தால், அவைகள் கெடவும் செய்யாது. வினை யென்றும், பாவ மென்றும், உன்னைத் தொடராதே!

(5) யாம் என்ன கேட்கிறோம்? உன் அறியாமையால், அஹங்காரத்தையும், அபிமானத்தையும் தானே? கேட்கிறோம். அவைகளை விடாமல் இருந்தால், நீ பிறந்தது வீண் தானே?



(6) மண்ணாலான கோயில், எமக்கு வேண்டாம் என்றும், வேறு பொன், பொருள், ஆபரணம், பட்சணம், அபிஷேக ஆராதனை எமக்கு வேண்டாம், என்பதாகவே சொல்கிறேன்!

(7) உன் இதயத்தை கொடு, அதுவே எமக்கு கோயில் என்கிறேன்! உன் கண்ணீரைக் கொடு, அது எமக்குக் காணிக்கை என்கிறேன்!

(8) உன் கண்ணீரே உன் உள்ளத்தை கழுவும் புனித கங்கை ஆகும். வேறு எதுவும், உன் உள்ளத்தை, கழுவாது என்றும், கழுவ முடியாது, எனவும் சொல்கிறேன்!

(9) மண்ணாலான கோயிலும் வேண்டாம்! மண்ணாலான பொன் பொருள், பட்சணம் பிரசாதம், எதுவும் வேண்டாம் என்கிறேன். அவை அனைத்தும், எம்முடையதே! எம் பொருளை, எமக்கு கொடுக்க, உனக்கென்ன யோக்கியதை! இருக்கிறது என்கிறேன்!

(10) எம்மிடம் இதயமும் (மனமும்) இல்லை, வேறு எந்த எண்ணங்களும் இல்லை! உன்னிடம் இதயம் இருக்கிறது, என எம்மிடம் இல்லாததை, உன்னிடம் இருப்பதைத்தானே, கேட்கிறேன்?

அனைத்தும் மண்ணே! மண்ணாலான உடலுக்கு, மண்ணாலான, அனைத்து நாமரூப பொருள்களையும், நான் எனது என்ற, அகங்கார அபிமானத்தால், அனுபவித்து அனுபவித்து, வினைகளையும் அதனால், ஜனன மரணத்தையும், ஏன் வலுவில், வாங்கிக் கொள்கிறாய்? எனவுந்தான் ஸ்ரீ பகவான் கூறுகிறான். மேலும் எம் நாமரூபத்தைச் சொல்லி, எல்லாம் உன்னுடையதே என்றும், மனதார நீயே என்றும் எல்லாம் விட்டுவிட்டால், வினையின் மண் வினை முடிந்ததால், அது மண்ணாகி விடும். திரும்ப எழாது. நீயோ உன் ஸத்குரு வாக்கியப்படி, அதுவே நாம்! நாமே அது! என்றறிந்தால், அது நீ ஆகிவிடுவாயே, என்பதைத்தான், ஸ்ரீ பகவான் கூறுகிறான்!



உ

(4ஓ)

இதில் மேலே கூறிய, நிலையில் உங்கள் அனைவரையும், நாயே / பேயே என்றும் / இன்னும் பல, கடும் சுடும், வார்த்தைகளால், நிந்தாஸ்துதி செய்ததை, அனைத்தையும் புஷ்பாஞ்சலியாக, ஏற்றுக்கொண்டு, இந்த ஏழை பரதேசியைத் தயைகூர்ந்து, மன்னித்து அருளும்படி, உங்கள் அனைவரின் திருவடிகளிலும், பணிந்து, மன்னிப்பு கோருகிறேன்/

அங்க சுத்தி இல்லாமல், சித்தம் சுத்தி ஆகாது/
சித்தம் சுத்தி ஆகாமல், உணர்ந்த பக்தி நிலைக்காது/
உணர்வின் பக்தி இல்லாமல், ஆத்ம ஞானம் லபிதமாகாது/
நீரே காண்பதை உணரவும்/

(1) அங்க சுத்தி:— அங்க சுத்தி என்பது, சரீர சுத்தி ஆகும். சரீரசுத்தி என்பது, வார்த்தைக்கு மாத்திரமல்ல. ஸ்ரீபகவானை அடைவதற்கு, சரீர புறச் சுத்தம் தேவைப்படுகிறது. இதை உடலையும், அதைச்சார்ந்த உணவையும், உடையையும், இருப்பிடத்தையும், "கூடுமான வரை" சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதில் "விசேஷ" கவனம் வேண்டாம். இருப்பதிலும், கிடைப்பதிலும், இயல்பாக நடப்பதிலும், "ஸ்ரீ பகவன்நாம ஸ்மரணையுடன்" இதுபோதும் என, நிறைவு கொள்ள வேண்டும். இதற்கு, "மடி, ஆச்சாரம், அனுஷ்டானம், விதிமுறை கட்டுப்பாடு," "இயல்பாக வேண்டும்"! "கடினம் வேண்டாம்"! இது "பூவின் நிலையாகும்".

சித்த சுத்தி:—

(2) இந்த அங்க சுத்தியால், சித்தம் சுத்தமாகும்! சித்த சுத்தி என்பது, "கரண ஒழுக்கமாகும்". அங்க சுத்தி என்பது, "கருவி ஒழுக்கம் ஆகும்".

கருவி:— கைகள்/ கால்கள்/ மலஜலத்துவாரம்/ வாக்கு/ 5.

கரணம்:— கண்கள்/ காதுகள்/ நாசித்துவாரம்/ சுவை/ சரீர ஸ்பரிசம்/ 5.
(குறியே பிரதானம்)



உ



தெய்வ நிலையை, பெறுவதற்கும் :
தெய்வ திருமை என்ற, கருணையை பெறுவதற்கும்
“முதலிடம் கொடுத்து”, தேக, குடும்ப போஷணைக்கு, இரண்டாவது இடம் கொடுப்பதாகும்.
இதன் நோக்கோ, ஸ்ரீபகவானை அடைந்து”, அவன் திருமையிறவு, தொழில், பணம், குடும்ப சம்ரட்சணை, என உறுதி பெறுவதாகும்!
இது ஆவின், பின்புறம், பிந்த தோன்றி அது பருக்கும் நிலையாகும்!

③ பக்தியின் நிலை :— இங்கு சோடச உபசார பக்தி (புற உணர்ச்சி பக்தி) குறிப்பிடவில்லை. அதாவது ஊர் உலகம், உறவு மெச்சும் பக்தி அல்ல. உள்ளம் உவந்து, உள்ளம் கனிந்து; உள்ளம் ஏங்கி, உள்ளம் உருகி, உள்ளத் துடிப்புடன்; கண்ணீர் பெருக்கெடுத்து டனும், கதறி அழும், ஸ்ரீபகவத் உணர்வுடன், கூடிய பக்தி ஆகும்!
ஊரிலேன் காணி (நிலம்) இல்லை! உறவு (உன்னையல்லால்) மற்றொருவர் இல்லை! பாரில் உன் பாதமே (சரண அரவிந்தமே, சரண் புகுந்தோம்) பற்றினேன் பரமமூர்த்தி! காரொளி வண்ணனே (கருணையின் நிலையில் கருமேகம் மேனி என மொழிபவனே) எம் கண்ணா! கண்ணா! கண்ணா! கண்ணா! கண்ணா! கண்ணா! கண்ணா! கண்ணா! எனக் கதறுகின்றோம்! ஆர் உள்ளார் (இங்கு) கடைக்கண் பாராய், எம் ஐயனே! என கதறி, கதறி, கதறி, பதறி, பதறி, பதறி, உருகி, உருகி, உருகி, அழுதால், அவனைப் பெறலாம்! அவனை அடையலாம்! அவனாகலாம்! அவனே நாம் ஆகலாம்! நாமே அவன் என ஆகலாம்! இதுவே பக்தியாகும். மற்றும் அர்ச்சனை, பக்தியல்ல! புத்தியாகும்! அதுபுகையும் புத்தி! இது எரிந்து, வினையை சாம்பலாக்கும் பக்தியாகும்! இது இந்நிலையின், அனுபவமாகும்!





(4) ஞான நிலை:— அவன் நாம் ஆவோம்!

நாமே அவன் ஆவோம்! அங்கு நம், அறியாமையின், தேகாத்ம புத்தி யென்னும், ஜீவ பந்தம் கெட்டு ஒழியும்! அதனால், நம் கவனக்குறைவால் தோன்றிய, ஜீவ கர்த்ருத்வம் அழிந்து நாசமாகும். அங்கு, நாமே அவனாக இருப்போம். அங்கு அவன் மாயை, நம்மை தொடமுடியாது. அவனாகிய நாமும்! நாமாகிய அவனும், ஒன்றான தன்மையினால், தத்பதமும்! த்வம் பதமும், இணைந்து, அஸிபதமான நிலையில் ஈச கர்த்ருத்வம், அழிந்து நாசமாகும். அங்கு அதுவே நாம்! நாமே அது என்ற நிலையில், அம்மா அதுமாகவே இருப்போம். இங்கு முதலாவது பூவின் நிலை! என்றும். இரண்டாவது, பிஞ்சாகிய காயின் நிலை! என்றும். மூன்றாவதாக, முதிர்ந்த காய் நிலை! என்றும். நான்காவதாக, அக்காய் கனியாகி, கனிந்த நிலை! என்றும், வரிசைக்கிரமமாக சொல்லலாம். ஆகவே பூ இல்லாமல் பிஞ்சு இல்லை! பிஞ்சாகாமல் காய் இல்லை! காய் ஆகாமல் அது கனிந்து, கனி ஆகாது என்பதே உண்மை! ஆரம்ப சாதகர்களுக்காக, ஒன்றை கூறுகிறேன்.

உங்களுடைய மடி, ஆச்சாரம், அனுஷ்டானம், விதிமுறை கட்டுப்பாடுகள், உங்களுக்காகவே, உங்கள் மனதால், கட்டிய போட்ட கட்டுகளாகும்! அக்கட்டை நீங்கள் தான், உடைத்தெறிய வேண்டுமே யன்றி, பிறரொருவர், அதை உடைக்க முடியாது! உடைக்கக் கூடாது! உடைக்க இயலாது! பிஞ்சாகும் போது, பூ வாடும்! காய் ஆகும் போது, பூ கருகும்! காய் முதிர்ச்சியானால், தானே உதிர்ந்து விடும்! இதுவே நியதி! இதுவே நீதி! பூ வாடுகிறதே என, மனமயங்கி மயக்கம், வேண்டாம் என, உங்கள் பாதம் பணிந்து, வேண்டுகிறேன்! (ஆச்சாரம் அனுஷ்டானம், மடி விதிமுறை, கட்டுப்பாடு, இயல்பாக விடும்போது ஆனந்தம் அடையவும் கலங்க வேண்டாம்.)



படியெல்லாம், கடந்த சுத்த, பிரம்ம
வஸ்துவாக, இருந்தும்! பஜனையால்,
மகிழ்ந்து தோன்றும், திவ்ய மூர்த்தியே!
ஒரு கணத்தில், எமதுளத்தை, உருக
வைத்த, உமது நாமம்! ஓம் நமோ நாரா
யணாய! ஓம் நமோ, நமோ! என்றும்,

"எனது, நான்" எனச் செருக்கில், மமதையுற்று,
(அபிமான, அஹங்காரத்தால்)
அமிழ்ந்த எம்மை! இனியணைக்கி, இணைய வைத்த,
இன்ப மூர்த்தியே! (ஆனந்த சொரூபனே) ஒரு
கணத்தில், எமதுளத்தை, உருக வைத்த, உமது
நாமம்! ஓம் நமோ நாராயணாய! ஓம் நமோ, நமோ!
என்றும்; மெய் அன்பர்கள், தம் அனுபவ நிலையில்,
பாடியிருக்கிறார்கள்! இதன் பொருளாவது???

நாமம், ரூபம், குணம், குறி, காவம், தேசம், வர்த்த
மானம், மனம், வாக்கு, காயம், என்னும், இந்த
பத்து நிலைகளையும், கடந்த சுத்த பரப்பிரம்ம வஸ்துவாக
இருந்தாலும்; அதை உணரும் நிலையில், ஏக்கம்,
உருக்கம், கண்ணீர் பெருக்கத்துடன், இருக்கும் பக்குவ
ஆன்மாக்களுக்காக, (மெய் அன்பர்களுக்காக)
தாம்தாமே, மற்றொன்று போல், பிரகாசத்துடன்
இந்த ஜகத்திற்கு வந்தது. அதாவது பர கருணை
யாக, இருந்த ஒன்று, இறை கருணையாக, ஸ்ரீபகவானாக
வந்தது என ஸ்ரீ அனுபவ மஹான்கள் கூறுவர்!
இதன் உண்மை என்னவென்றால்?



உ

காலாதீத அந்த ஒன்றே, ஓர் காலத்தை,
ஏற்படுத்திக் கொண்டு, நாம் செயல் பட,
இயலாத் தன்மையால், செயல்படும் நிமித்
தம், ஸ்ரீபகவானை வந்தபடியால், ஸ்ரீ பகவா
னாகிய, அவன் கிருபையை, முழுமையாகப்
பெற்று, அவன் அருளால் அவன் தாள் வணங்கி"
என்ற நிலையில், அவனை நாமாக்கிக் கொண்டு தான்,
நாமும் அவனும் இணைந்து, கலந்த நிலையில் தான்,
அது ஆக முடியுமேயன்றி, நாம் நேரே, பரத்தோடு,
கலக்க முடியாதென்பதே ஸத்தியம்!

இதன் காரணமாவது?

மாயாமனமும், அதனால் சார்ந்த, புண்ணியபாப வினை
யும், நம் கவனக்குறைவால், நம்மை பற்றி இருக்கிற
படியால், அவ்விரண்டும், இயக்க அம்ஸமான, ஸ்ரீ பக
வானிடம், விட்டாலன்றி, நாம் அது ஆக முடியாது!
ஆகவே தான், ஸ்ரீமத் ரிபு கீதையின், மறுவடிவமான,
ஸ்வயஞானானுபவ நூலின், முகப்பாடலே, வெகு வெகு,
தெளிவாக, அழகாகவும், ஆழமாகவும், அமைதியாகவும்,
ஆனந்தமாகவும், தெள்ளத் தெளிவாகவும், அமைந்திருக்கிற
அப்பாடலாவது!

சுத்த சிதாகாயமதாய் எந்த வஸ்து,
சுதந்திரமாய் தமது பரசக்தியோடு,
பக்தரெல்லாம் உய்யும் வண்ணம் கருணையாலே,
பரதத்வ வடிவாகத் திரண்டெழுந்தே,
அத்வைத ஆனந்தம் உரை அனுபவத்தின்,
அதிசயமாக எல்லோரும் அறியும் வண்ணம்,
நித்தமுமே ஆனந்த நடனம் செய்கிறது! என்றும்,
நிதம் நிதம் அந்த வஸ்துவினை நினைவில் வைப்போம்!
என்றோர் எம் ஸ்ரீ ரிபு மஹான்!

பரம் என்றவது சக்தி என்றும், யோகமாயாவான பொருள் கொள்க



முதலில் யாம் கொடுத்த பாடலின்படியே, இப்பாடலின் கருத்தும், அமைந்திருக்கிறது. பர, தத், துவ(ம்) என்பதை, மூன்றாக பிரிக்கும்போது. தத், த்வம், அஸி = தத் பத வாச்சிய, பரமாத்மாவும். துவம்பத வாச்சியமாகிய, ஜீவாத்மாவும். அஸிபத வாச்சியமாகிய, பர சொரூப, பரம்பொருளுக்கு அன்னியமில்லை. என்பதை. இங்கு பர என்பது அஸிபதமாகும்! தத் என்பது பரமாத்மா என்ற, ஈசன் நிலையாகும்! துவம் என்பது ஜீவாத்மா நிலையாகும்! மேல் நிலையில் இருக்கும், அது செயல்படுவதற்காக, ஈசன் நிலையென்ற, ஸ்ரீ பகவான் (பரமாத்மா) ஆனது. அதுவே, மேலும் ஒருபடி இறங்கி, பந்த ஜீவன் (ஆத்மா) எனவும் ஆனது. ஆகவே ஜீவாத்மா பரமாத்மாவாகி! பரமாத்மா பரம்பொருளாக, முடியுமேயல்லாது, ஜீவாத்மாவே பரம்பொருளாக முடியவே முடியாது! இதுவே ஸத்தியம்!

காலாதீத பர சொரூபமே, சுதந்திரமாய், தம்முடைய, யோகமாயாவுடன், இணைந்தால்தான், மறுவடிவம் எடுக்க முடியும் என்ற கருத்துடன் இணைந்து, சிவ சக்தியாக" (பரமாத்மா, ஜீவாத்மாவாக) வந்து, விளையாடிக் கொண்டிருக்கிறது! என அப்பாடலின் கருத்து அமைகிறது!

அவ்விளையாட்டானது, அன்பர்கள் நிமித்தமாக, உலக விளையாட்டு, போதும் என, நிவர்த்தி மார்க்கம் செல்பவர்களுக்கு மட்டும், அயன்! அரி! அரன்! ஆகியோரையும், ஸத்குருவாக தோன்றச் செய்தும், தோற்றச் செய்தும். இறை கருணை நிலையில், வினைகளை தாம் ஏற்றுக் கொண்டும், பர(குரு) கருணை நிலையில், மனதை மாற்றியாக்கியும், (அழித்தும்) இதற்கு ஜீவ அழிப்பு என்றும். விளையாடும் ஜீவர்களுக்கு, இறை கருணை நிலையில், போத போக்யங்களை, நிலைகண்டு, அள்ளிக் கொடுத்தும், அதை ஜீவ ரட்சிப்பு என்றும். அதுவே அவதாரமும். அதுவே ஜீவனாகவும். ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறதென, அன்பர்கள் நினைக்க!



நித்தமுமே ஆனந்த நடனம் செய்யும்:—
மூன்றுமே (பரம், பகவான், ஜீவன்)
அதுவாக இருந்தாலும், விளையாட்டு என
வந்துவிட்டால், பிரிவினை இருந்தால்தான்,
விளையாட்டு, சுவாரஸ்யமாக அமையும்!

ஐக்கியம், ஒற்றுமை, ஓர்மை, அபேதம், மௌனம் என இருந்தால், அது விளையாட்டாக இராது. அமைதி ஆனந்தம் என ஆகி ஆகிவிடும். அங்கு விளையாடுபவரும் இல்லை, விளையாட்டும் இல்லை.

“மௌனம் கலக நாஸ்தி!” என இருந்தால், எவர் ரசிப்பது? எவர் ஆடுவது? அலுப்புத் தட்டிப் போகும்!

“கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்!” என இருந்தால், சண்டை சச்சரவு! போட்டி பொறாமை! வம்பு வழக்கு! அடிதடி கலகம்! ஊடல் மோதல்! பழி பாவம்! குற்றம் குறை! விருப்பு வெறுப்பு! இவைகளே, “விளையாட்டின் லட்சணமாகும்!”

உப்பு, உறைப்பு, புளிப்பில்லாமல், “சப்பென” உணவு இருந்தால், எவன் ரசிப்பான்? உப்பு, உறைப்பு, புளிப்பு, இவைகளுடன் “காரசாரமாக உணவு” இருந்தால், உணவு சுவைக்கும்! இவ்விளையாட்டு, எப்படி இருக்கிறதென்றால்?

(1) வார்த்தையோ, செய்கையோ, ஒருவரைப்போல் ஒருவர், இருக்கவும் கூடாது! இயங்கவும் கூடாது! இதைவ், நாடகம், கலகம், பயதுக்கம், இருந்தால் ரசிக்கலாம்!

(2) ஜீவன் கேட்பதை, ஸ்ரீ பகவான் கொடுக்கவாகாது. அதற்கு காரண காரியம், பல சொல்ல வேண்டும்! (விளையாட்டுக் காட்ட வேண்டும்) இங்கு சந்தேகம், குற்றம் குறை, [illegible], ரசிக்கலாம்!

(3) பல உயர் பிறவியையும், அதன் போக போக்கியங்களையும் காட்டி, ஜீவர்களை மயக்க வேண்டும்! (இது சாமான்ய ஒருவன் காரியம்) இங்கு சாக்ஷியாக பிரிவினால், அடியார்கள், அடியாட்களாக, மாறுவதை ரசிக்கலாம்!



(4) பொதுவாக, தோஷ குணங்களில்
பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை
தோற்றிக் கொண்டே இருந்து, கூச்சல்!
குழப்பம்! குடி கெடுத்து குழப்பம்!
என இருந்தால், ரஸனையும், இன்பமாய்
நலமாக அமையாது! நலமும் கொடுக்காது! அமைவதும்!
இக்கவியால் இவைகளையே, இச்ஜீவர்கள் விரும்புகிறார்கள்!
விரும்ப வேண்டும்! விரும்பியே ஆக வேண்டும்!
மேலே கூறிய, இவை அனைத்திற்கும், காரணம் "மனம்" ஆகும்!
அந்தமாயா மனம், நம் வசம் ஆக வேண்டுமானால்?
,, ,, ,, அமைதி பெற ,, ?
,, ,, ,, கோர குணங்களை விட ,, ?
,, ,, ,, அழிந்து நாசம் ஆக ,, ?
,, ,, ,, மறைந்தாகி அது ஆக ,, ?
மாயாவின், தயை அவசியம் வேண்டும்! மாயாவின்
தயையை பெற வேண்டுமானால், அது இயங்கும், ஸ்ரீபகவான் கருணை,
அவசியம் வேண்டும்! ஸ்ரீபகவான் கருணை, பெற வேண்டுமானால்,
அனைத்து நாம ரூப ஜகத்தும், பொருள்களும், எல்லாம் நீயே!
என்றும், எல்லாம் உன்னுடையதே! என்றும், முழுமையாக
ஆக வேண்டும்! "நான், என்னுடையது," முழுமையாக அழிய வேண்டும்!
உன்னுடைய, அஹங்கார அபிமானமே, பிறவியின் வித்தாகவும்,
பிறவியின், ஆகாமிய கர்மாவாகவும், இருக்கிறது என்பதே
ஸ்ரீமஹான்களின் அநுபவமாகும்! ஸ்ரீபகவானோ, வேறு
எதையுமே கேட்கவில்லை! அவைகள் அவனுக்கு தேவையும்
இல்லை! உன் அறியாமையின் குணமாகிய அஹங்காரமும், அபிமானமும்,
தான் அவனுக்கு தேவை! அவ்விரண்டையும், அவனிடம்
எல்லாம் நீயே என, விட்டு விட்டு நீ சும்மா சுகமாயிருக்கலாமே?



உ

51

இதில் கூறியபடி, ஜகத், ஜீவ, பரம், (ஸ்ரீபகவான் என்ற ஈசநிலை) பராதீத, (சோவாதீதபரசொரூப நிலை) ஆகிய, இந்த நான்கின் விளையாட்டே நித்தம் நித்தம், ஆனந்த நடனம் செய்யும், திருவிளையாடலாகும்!
இவைகளை, விளையாட்டாக கருதாமல், வினையமாக (வினையாக மாற்றுவது) கொள்வது மாயாமனமாகும். விளையாட்டாக கருதினால், வினையம் என்ற, வினையும் இல்லை! ஜனனமரண, தொல்லையும் இல்லை!

இவைகளை, வினையமாக (தோஷமாக) கருதினால், புண்ணியபாப, வினையும் உண்டு! ஜனனமரணமும் உண்டு! விளையாட்டாக கருதுவது:- எல்லாம் அவனே! எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! அவனன்றி, அணுவும் அசையாது! இவ்விளையாட்டில், யாம் அவன் குழந்தையே! யாம் ஒரு பதுமையே! அவன் நம் வினை கண்டு, ஆட்டுகிறான்! அதற்கு ஏற்றபடி, உடல் ஆடுகிறதும் என்றிட உணர்வோடு இருப்பது, விளையாட்டாகும்!
வினையமாக (வினையாக) கருதுவது:- நான்! என்னால்! என்னுடையது! என்ற நிலையில், அகங்கார, அபிமான, ஆசிக்க, அதிகார, வெறியால் உடைமையும், உரிமையும், பாராட்டி, ஆடுவது விளையாட்டல்ல! அது வெறியால் வந்த, வினையம் எனும், புண்ணியபாப, வினையாகும்! இதற்கு ஜனனமரண, சுழற்சி அவசியம் உண்டு!
முன் கூறியபடி, விளையாடி முடித்தால், வந்த வினை முடிவுறும்! எந்த சொந்த வினையும் தொடராது! அகம்பவமற்ற அது! அதுவே நாம்! என நித்த பிரம்மானந்தம் சத்தியமாகும்! அதுவே, ஜீவன் முக்தி என ஸ்ரீமஹான்கள் கூறுவர்!



உ



மனம் புத்தி, சித்தம் இம்மூன்றுமே,
மனம் என்றே சொல்லலாம். இம்மனம்,
நாமரூப, ஜக ஜீவ, சொரூபங்களுக்கு,
மட்டும் பொருந்தும். எண்ணமாக இருக்
கும்போது, மனம் என்றும். அவ்வெண்
ணம், இயக்க நிலையில், செயல்படும்போது,
குணதோஷம், என ஆகிறது. அக்குண
தோஷம், நான்; எனது என பின்னலிடும் போது,
அஹங்காரமும், அபிமானமும், உண்டாகி, புண்
ணியபாப வினைகளை, உண்டு பண்ணிக் கொள்கிறது.
அப்புண்ணியபாபமே, ஜனனமரண சுழற்சியாகும்!

இந்த மனமே, (எண்ணமே) குணதோஷங்களை,
ஏற்காமல், மேல்நோக்கி செல்லுமாயின், அது
அறிவு எனபிரகாசிக்கும். இங்கு மனம், அறிவானால்
நான் எனது, அற்ற நிலையில், நாம் நமது என மாறி
விடும்! இதுவே அறிவு சொரூபமாகும்.
மனமே பந்தம்! பந்தமே மனம்! அதைப் போல
அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு! ஆகும்!
நான் ஒரு ஜீவன்! நான் ஆண்! நான் பெண்! நான் குடும்பி
என்ற, சம்சாரி என்பதே, பந்த ஜீவன்! இந்த நிலையில்
நான். எனது என்பதை, விடாததே வினைப்போக ஜீவன்!
யாம் ஸ்ரீபகவானின் குழந்தையே! நாமரூப ஜகம்
அனைத்தும், ஸ்ரீபகவானால், எமக்கு கிடைத்த, விளையாட்டு
பொருள்களே என்பது, சாட்சி சைதன்யமாகும்!
இது ஸ்ரீபகவத் சொரூபமாகும். அனைத்து ஜீவகோடி
களும், எம் சொரூபமே என்பதும், அனைத்து நாமரூப
பொருள்களும், எம்முடையதே! எமக்கு அன்னியமாக,
எதுவும் இல்லையென, உணர்வது, அகண்டபாவனை
என்ற, சர்வ சாட்சி தன்மையாகும்! இதுவே,
ஸ்ரீ பரமாத்ம நிலையாகும்!



உ



அநித்ய நாம ரூபங்களும், நாமரூபங்களாக இல்லை என்றும், யாமாக இருக்கிறதும் எம்மின்று தோன்றிய, மாயாமனதின் கற்பனையே! நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களாகும்!

மேலே கூறியவை, அநித்யம் என்று உணர்ந்து மறந்தால் இல்லை!

எண்ணுவது என்பது, மேலே கூறியவைகளை, விரிவடைய செய்வது!

மறப்பது என்பது ” ” விரிவடையாமல், யாமே அநித்யம்! மெய்க்கண்ணியம் எவையுமில்லை! யாம் நித்திய பரிபூரணனே! யாம் பிரம்மானந்த சொரூபமே என, எண்ணத்தை, ஒன்றுபடுத்தி, அம்மாவே சுகமாக இருப்பது, நாம ரூப, ஜக ஜீவ, சொரூபங்கள், அநித்யம் யாமாகவும், எம்முடையதாகவும், ஸத்தியமாக ஆகும் போது, உலககர்த்தாக்களாகிய, அயன், ஹரி, ஹரன் ஆகிய இம்மூவரும், கர்த்தாக்களாக இல்லை! என்றும் அம்மூவரும், ஆத்ம ஞானத்தை உணர்த்தும் ஸத்குருவாகவே இருக்கிறார்கள்! என்ற உறுதியுடன், அம்மா சுகமாக இருக்கலாம்!

நாம ரூப, ஜக ஜீவ, வர்க்கங்கள் தோற்ற தோன்றத் தன்மையால், ஏகத்துவம், ஆதி அந்தம் நடு என்பதே இல்லை! மேலே கூறியவை, நாமரூப தோற்றங்களாக தோற்ற தோன்றத் தன்மையால் மனமும் தோற்றமும் இல்லை! தோன்றவும் இல்லை. ஆகவே, ஜரை (மூப்பு) ஜனன மரண, பந்த மோட்சம் அதன் சாதனை, சாத்தியம் எவையுமில்லை!

அறியாமையால் (கவனக்குறைவால்) மனம் வசப்பட்ட ஜீவர்கள் கேட்கலாம்: உலகம் இல்லையென சொல்கிறீர்களே, ஆனால், எங்களுக்கு தோன்றுகிறதே, என கேட்கலாம்!





உ

யாம் சொல்கிறோம் :— உங்களுடைய
மனதின் போராட்டத்திலும், உங்களை
நீங்களே நாம் யார்? என அறியாமல்
எதிரும் புதிருமாக (நேருக்கு நேர்,
வித்தியாசமாக, விபரீதமாக, விநோதமாக,
விசித்திரமாக, விரோத குரோதமாக)
காண்பதால், உங்கள் வாழ்க்கை, உங்களால் குறைத்து
நிறுத்த முடியவில்லை. உங்கள், வாக்கின் மாயாஜாலத்தால்,
பேசிப், பேசிப், பேசிப், பேசிப், பேசியே!
இல்லாத உலகிற்கு, உயிர் கொடுக்கிறீர்கள். பேச்சை
குறைத்து, குறைத்து, குறைத்து, குறைத்து, குறைத்து,
எல்லாம் ஒன்றே. அது ஆனந்தமே! எல்லாம் ஒன்றே. அது
ஆனந்தமே. என்ற அனுபவம் கூடி வந்தால், சொல்லும்
யாமும் இல்லை. கேட்கும் நீயும் இல்லை. இருப்பது ஒன்றே
நடப்பது நலமாகிய, ஆனந்தமே என நீ உணர முடியும்.

காண்பவனாக இரு. என்றும் காணும் பொருளாகாதே.
என்கிறார்கள், ஸ்ரீ அனுபவ மகான்கள். இதன் பொருள்:—
நாம ரூப, ஜட ஜீவ, வர்க்கங்களின் தோற்றமாக இராதே.
இவை அனைத்தும், எமக்கு அன்னியமாக, இல்லை என்ற,
அறிவின் உணர்வோடு இரு. என்பதே இதன் பொருள்.
அதாவது ஸ்ரீபகவானாக (சாட்சி)யாக இரு என்றும்,
ஸ்ரீபகவானின் சிருஷ்டி (நாமரூபமாக)யாக, இராதே
என்றும் பொருள்படும். அதாவது, ஸ்ரீபகவானாக
இருந்து கொண்டால், சிருஷ்டி (காணும் வஸ்து) இருந்
தாலும், இல்லாவிட்டாலும், சும்மாவே சுகமாக,
இயல்பாக இருக்க முடியும். ஆனால் சிருஷ்டியாக
இருந்தால், அதை காண்பவன் (அனுபவிப்பவன்)
இல்லையென்றால் சிருஷ்டி இருந்தும், பிரயோஜனம்
இல்லையென்றாகிவிடும்.



உ



சிருஷ்டிக்கு உட்படும் போது? அப்
பொருள் தோற்றம், இருப்பு, மாற்றம்,
மறைவு, (ஜனன மரணம்)க்கு ஆட்பட
டே ஆகவேண்டும்! ஏனசுகமாக சும்மா இருப்பாயாக!

ஊசிநாட்ட இடம் இல்லாது
ஒன்று உண்டென்றால், சமுத்திரத்தையும், ஆகாயத்தையும்
சொல்லலாம். இதையே பிரம்மம் என்றும், தாவாத்த
பரசொரூபமென்றும் உதாரணமாக இந்த ஸ்ரீமஹான்கள்
சொல்வர்.

பிரம்மமானது, எங்கும் சர்வ வியாபகமாக இருந்தும்,
அறிவாக (ஆத்மாவாக) நாம் இருந்தால் அதன்
மயமாகவே, ஆனந்தமாகவே இருக்கலாம். ஆனால்
மனம் வசப்பட்டு விட்டால், நம் கற்பனையின் மூலமாக,
நாமரூப குண தோஷங்கள் நமக்கு நாமே, உண்டு பண்
ணிக்கொண்டு சஞ்சலம் அடைய வேண்டியதாயிருக்கு.
இதற்கு, ஸ்ரீபகவானை, மறந்த தன்மையினால் அவனுடைய
மாயாவும் மாயா மனமும், நம்மை சஞ்சலத்திற்குள்
ளாக்குகிறது என உணர்க! ஸ்ரீபகவானை, முழுமையாக
சரண்புகுந்தால் அவனுடைய மாயாவும், மனமும்,
அவனிடமே மறைந்து, மயமாகி விடும். அப்போ
நாமும், சும்மா சுகமாக இருக்கலாம்!

அந்த மனதாகிய ஸத்தே, ஸித் சொரூப
மானது. அந்த ஸித் சொரூபமே, விளையாட்டின்
நிமித்தம், சித்தமென ஆனது. (மனம், புத்தி
சித்தம் இம்மூன்றும் ஒன்றே) சித்தம் (மனம்)
நாமரூப ஜகத்தை, கற்பனை பண்ணி விளையாடிக்
கொண்டிருக்கிறது. கற்பனையை எல்லாம் நீயேஎன,
ஸ்ரீபகவானிடம் விட்டு விட்டால், சித்தமானது,
ஸித் சொரூபமாகும். அங்கு ஸத்தாகிய (ஆத்மாவான)
நாம், சும்மா சுகமாக இருக்கலாம்!



ஜீவவர்க்கங்கள் எல்லாம் அவனால்,
எல்லாம் அவன் பொருள் என ஆனால்;
அனைத்து இயக்கமும், அவனுடையதானால்;
நாமும் அவனாக முடியும். பின் அவனும் நாமும்
அனைத்தும் ஆக முடியும்! அனைத்தும் நாமானால்,
நாமே அதுவாகி, சும்மா சுகமாக இருக்கலாம்.

அனைத்து நாமரூப, ஜகஜீவ கோடிகள், அனைத்தையும், ரூபத்தையும், பெயரையும் மறந்து எல்லாம் மண்ணே என, திட வைராக்யத்தால் ஆக்கிக் கொண்டால் பின்னி பின்னி, ஆட்டம் போடும் மனம், அடங்கி அடங்கி, அழியும். மண்ணே தானே யென்றும்! தானே ஜீவ அணு என்றும்; ஜீவ அணுவே, ஆத்மா என்றும், ஆத்மாவே பரமாத்மா என்றும்; பரமாத்மாவே பரப்பிரம்ம மென்றும்; ஸ்வய அனுபவ ஞானத்தால் உணர்ந்தால், அதுவே நாம் என்றும்! நாமே அது அது! என்றும்; சும்மா சுகமாக இருக்கலாமே! சொல்லாலும் சொல்ல வொண்ணா பரமே யாகி,

சும்மாவே இருந்து மஹா சாந்தி ஆவாய் :—

நாமரூப, ஜக ஜீவ தோற்றங்களும் மலை, கல், மரம் செடி கொடி, புல் பூண்டு, ஆகிய அனைத்தும், சொல்லுக்கும்! சொல்லால் வினையும் செயலுக்கும்! உட்பட்டவைகளாகும்! இங்கு சொல்லும் செயலும், குணதோஷ சம்பந்தம் கொள்ளும் போது, அவை புண்ணிய பாப, வினைக்கும்! அதனால் நிகழும் ஜனன மரண சுழற்சிக்கும், ஆட்பட்டேயிருக்கும்! இந்த சொல்லையும், செயலையும், சற்றுமாற்றி, அதாவது சொல்லால், அது செயல்படாத ஒன்றென்றும்; செயலால், அதன் அம்ஸ ஸ்ரீ பகவான், செயல்படுபவன் என்றும், அதுவும்! அவனும்! நாமே என்றும்; உணர்வு நிலையில், சும்மாவே சுகமாக இருக்கலாமே!



உ (57)

வாய் ஞானம் வேண்டாம்! அனுபவ ஞானம் வேண்டும்! :- நானே ஆத்மா! நானே பரமாத்மா! நானே பரப்பிரம்மம்! நானே பரசொரூபம்! இதுவாய் ஞானம்!

ஆத்மக் காரணம் அஹங்காரம், அதிருந்தால்தான், அவனும் ஆகலாம். அதுவும் ஆகலாம்! இயக்க நிலையில், எல்லாம் அவனே! எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! என ஆகி விட்டால், இங்கு அஹங்காரமும் அபிமானமும் இல்லை! இது அனுபவ ஞானம்! எல்லாம், அவனே என்ற நிலையில், செயலை இங்கு விட்டு விட்டால், இயக்கமற்ற நிலையில், நாம் அதுவாகவே இருப்போம்! என்பதில், சந்தேகம் இல்லையென அம்மா சுகமாக இருக்கலாம்!

தூங்காமல் தூங்கும் நிலை, பெற வேண்டும்! இதற்கு:- காண்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும், இயக்க நிலையில், அவனாகவும்! இயக்கமற்ற நிலையில், அதுவாகவும்! உணர்வு நிலையில், உணர்ந்து எழுச்சியும் (அஹங்காரமும்) வீழ்ச்சியும் (அபிமானமும்) முழுமையாக ஒழிந்து, எல்லாம் நீயே! என்றும் (அவன்) எல்லாம் ஒன்றே! என்றும், (அது) எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என, மனம் அடங்கி, அமைதியுடன், பொறுமையுடன் இருந்தால், அதுவே தூங்காமல் தூங்கும் நிலையும், சுகமான சுகமாக, இருக்கும் நிலையுமாகும்!

குறிப்பு:- பொறுமை, பொறுமை என்று, வாக்கால் மட்டும், சொல்லி பிரயோஜனம் இல்லை. பொறுமை கடலினும் பெரியது. பொறுமைக்கு எல்லையோ அளவோ இல்லை! பொறுமை என்றால், வருத்தும், கேட்கும் சொல்லையும் செயலையும், மனவுணர்வும் நோக்கைப் போல, எல்லாம் ஒன்றே! எல்லாம் நன்மையே என, நாம் அடங்கி, மறைந்து அடக்கமுடன் அமைதியும், சாந்தியும் கொண்டு, ஆனந்தமாக இருப்பதே பொறுமை!

உ





எமதய்யன் திருடனாகிய கண்ணன்
சொன்ன ஓர், முக்கிய விளக்கம்!

ஸ்ரீபகவான் என்றால் கருணை! கருணை என்றால் ஸ்ரீபகவான் ஆகும்! மற்றோர் நடையில், ஸ்ரீபகவான் என்றால், அது ஓர் அருள்பிரவாகம், அதாவது, தேடல் நிறைந்த ஆவலில் / பக்குவ ஆன்மாக்கள் உள்ளத்தில் ஐயமின்றி பாக எந்த விதடையும், பெருக்கெடுத்து ஓடும், ஓர் ஜீவப் பிரவாகம் ஆகும்! ஆனால்?

மாயா என்றால், ஒன்றை மற்றொன்றாய், காட்டுவதாகும். அந்நிலையில், ஓர் மயக்கத்தை, அதாவது, ஓர் போதையை, உண்டு பண்ணுவதாகும்!

மனம் என்றால், மாயா மாற்றிக் காட்டுவதை உணர முடியாமல் நம்பி நம்பி, ஏமாந்து அம் மாற்றத்தால் தடுமாறி, ஏமாறுவதாகும்! அம் மயக்க போதையிலேயே, திரும்ப திரும்ப, விழுந்து விழுந்து, அம் மயக்கத்தால் நாம் யார்? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் என்ன செய்ய வேண்டும்? ஆனால் நாம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற அந்த வரை, நம் தவறுதான் என்று உணர முடியாமல், ஸ்ரீபகவான் பேரிலோ, மற்றவர் (ஜக ஜீவன்) பேரிலோ சுமத்தி அதனால், புண்ணிய பாவத்தை, சேகரித்துக் கொண்டு, ஜனன மரண சுழற்சியில் சுழன்று கொண்டிருப்பது மனமாகும்! "தன்றே தான் கெட்டால், அண்ணாவி (இறைவன்) என் செய்வான்" என்ற நியதியில், தன்னை நோக்காமல், (தான் திருந்தாமல்) பிறரையே நொந்து நொந்து, தான் வெந்து (கெட்டுப்) போவது மனமாகும்! மனமடமையால்,

இதில் ஓர் உண்மை என்னவென்றால்?

ஸ்ரீபகவானை நம்பினால் கருணை உண்டு! மீட்பு உண்டு! ஸ்ரீபகவானை நம்பாமல், மாயாவை நம்பினால், அதாவது நாமரூப, ஜக ஜீவர்களை, நம்பினால் மாயாவும், உன்னை மயக்காமல் விடாது. மனமும் உன்னை ஆட்டாமல் (கெடுக்காமல்) விடாது! ஸ்ரீபகவானையும் மாயாவையும் ஒன்றென நம்புவது மனமடமையாகும். அங்கு உண்மையே உன்னை ஏமாற்றுகிறது, என உணர்வாயாக!



உ



ஸ்ரீபகவான் சூட்சும வடிவம்! நிராகாரமே
உருவத்திற்கும், பெயருக்கும் அப்பாற்பட்ட,
ரூபம் தாங்கக்கூடிய, நிர்குண சொரூபம்!
(அதன் அம்சமான) மாயா அசூட்சும வடிவத்தின், சாயல்
என்ற, நிழல் ஆகும்!
ஆகவேதான், பகவானே மாயா என்றும், மாயாவே பகவான்
என்றும் சொல்கிறார்கள்! ஸ்ரீபகவானின், நிழல் தான்
மாயாவே தவிர, ஸ்ரீபகவான் மாயா இல்லை! அவன் கருணைப்
பிரவாகமாகும்! ஆனால்?

மாயாவின் மயக்கமாகிய, மனமும், மாயாவும்,
பண்ணும் திருவிளையாடலே, இன்றைய ஜகமாகும்!

ஸ்ரீபகவானை, முழுமையாக நம்பினால், அவன் நிழலான
மாயாவுக்கு, வேலையில்லாமல் போய் விடும்!

ஸ்ரீபகவானின் மாயாவை, (நாமரூப, ஜக, ஜீவ,
பொன், பொருள், உறவு, சுற்றம், நட்பு) இவைகளை நம்புகிறோம்!
அவனை, முழுமையாக நம்புவதில்லை! (ஸ்ரீபகவானை நம்புவதில்லை)

ஸ்ரீபகவானை, முழுமையாக நம்பினால், அவனுடைய,
அருள் கருணை பிரவாகத்தில், மாயாவின் காரியமனைத்தும்,
அடித்துச் சென்று நாசமாகிவிடும்! மாயாவின்
தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, இந்த நான்கும்,
இல்லையானால், மனம் செயல்படாது! செயல்பட முடியாது!
செயல்படவியலாது! இதுவே சத்தியம்!

மாயாவின் நாடகமும், மனதின் நடிப்புமே, இன்றைய உலகம்.
மாயா ஆட்டுகிறது! மனம் ஆடுகிறது! இதனால் புண்ணிய பாப
வினை சூழ்கிறது! இங்கு ஸ்ரீபகவானைச் சொல்லி குற்றமில்லை!
மற்ற எந்த ஜீவனையும், சொல்லி குற்றமில்லை!

ஸ்ரீபகவான், ஏன் முழுமையாக நம்பவில்லை என, சொல்கிறேன் என்றால்?
எல்லாம் அவனாகவும், எல்லாம் அவனுடையதாகவும், அவன்
செயலாகவும், இருக்கும் போது! அதாவது, இது சத்தியமானால்,





# உ

உனக்கு இருப்பும் இல்லை, உன் பொருளும் இல்லை, உன் செயலுமில்லையென்பதே சத்தியம். ஆனால்?

உனக்கு இருப்பும், உன் பொருளும், உன் இயக்கமும், தோன்றுகிறதே என்றால்?

"நான்/என்றல்" என்ற, அஹங்காரமும்/ "என்னுடையது" என்ற, அபிமானமும் "உடைமை/உரிமை" என்ற, இயக்கமும்! இதன் அம்சமான மாறுபாடும்/ வெட்கம்/ சூடு/ சுரணை/ வற்றை/ இவைகளே உன்னிடம் இருப்பும், உடைமையும், இயக்கமாக தோன்றுகிறது.

உன்றால் நீயே போட்ட ஓர் "திரையும்" (மேலேசொன்ன அஹங்கார அபிமான) இணைந்து, உன்னிடம், ஸ்ரீ பகவானின் கருணைப் பிரவாகத்தை, தடுத்து நிறுத்தி விடுகிறதென்று உணர்வாயாக!

ஸ்ரீ பகவானின், கருணையை மட்டும், பெற்று விட்டால், மாயா ஏது? அதன் படைப்பின் மனம் தான் ஏது? அவசியம் இல்லை! உலக நம்பிக்கையாளர்களுக்கு, மாயாவும் மனமும் தேவைதான்! ஆன்ம சாதனை பண்ணுகின்ற உனக்கு மாயாவோ, மனமோ தேவை இல்லை! ஆனால் ஸ்ரீ பகவான் தேவை. எப்படி என்றால்?

ஸ்ரீ பகவானே "பரமாத்மா" இது ஈசன் நிலை (தத்பதம்)

நீயோ (ஜீவ) "ஆத்மா" இது ஜீவ நிலை (த்வம்பதம்)

அதுவோ "பராசுரூபம்" இது பரநிலை (அஸிபதம்)

இம் மூன்றும் இரண்டாவதல்லவோ, "அது" ஆகவேயும்! இம் மூன்றில், ஒன்றில்லாததாயும் அது ஆக முடியாதே! பின் ஏன் ஸ்ரீ பகவானை தள்ள வேண்டும்? அவனின்றி, மாயாவையும், மனதையும் தள்ளு!



அவன் என்ற, ஸ்ரீ பகவான் கருணா பிரவாகத்தை,
பெறவில்லையானால், மாயாவின் மயக்கமும்
நீங்காது. மனதின் இயக்கமும் நீங்காது.
இவ்விரண்டும் நீங்கி அழியாமல், நாமரூப
ஜகம் தொலையாது. நாமரூப ஜகமுணை தோடும்
தொலையாமல், புண்ணிய பாப வினைகள் அழியாது. புண்ணிய
பாபவினை நசிக்காமல், பிறவித் தொல்லை தீராது. எனஅவன்
சொல்லி முடிக்கான். எல்லாம் நீயே என்ற நிலையில்
எல்லாம் அவனே என்றும், எல்லாம் அவன் பொருளே என்ற
நிலையில், எல்லாம் அவன் இயக்கமே என்றும், உன்
அஹங்கார அபிமானத்தை, அவனிடமே நிர்மலமாக விட்டு
விட்டு, நீ சும்மாவே சுகமாக இருக்கலாமே.

“அழுதால் உன்னைப் பெறலாம்” என்ற ஸத்திய வாசகமானது
அழுதால், அவனாகிய ஸ்ரீபகவானையும் பெறலாம். அழுதால்,
இயங்கும் அவன் ரூபமாக, இயங்கா அவனையும் உணர்ந்து, அது
ஆகலாம். அழுதால் மனம் கழுவப்படுகிறது. அழுதால் மன
அழுக்காகிய, புண்ணிய பாப வினைகள் நாசம் அடைகிறது.
ஆணவம், கர்மம், மாயா, ஆகிய இம்மூன்றுமே மன எண்ண
அழுக்குகளின் (புண்ணிய பாப வினையின்) மாசு ஆகும்.
இந்த மன அழுக்கை, வேறு மந்திர, தந்திர, யந்திர, பூஜை,
மற்றும் ஸத் கர்மாவால் நிவர்த்தி செய்ய முடியாது.
இம்மன அழுக்கை, அழுதால் உன்னைப் பெறலாம். என்ற
நிலையில், ஸ்ரீபகவானை வேண்டி அழும்போது, அழும் கண்ணீ
ரானது, புனித கங்கையாக, அம்மன அழுக்கை கழுவி,
பாவனம் பண்ணுகிறது. மனஅழுக்கு இல்லாத இடம்
(நான், என்றும், எனது, அற்ற இடம்) அது மனம் மறந்தான
இடம் ஆகும். மனம் மறந்தாகும் போது, நமக்கு அன்னியம்
எதுவும் இல்லாமல் போய் விடும். நமக்கு அன்னியமில்லாத
பரவெளியே, (பரவொளியே) நம் யதார்த்த ரூபமாகும்.
அங்கு அதுநாமே என, சும்மா சுகமாக இருக்கலாமே.





மனதினால் செய்ததுவே, செய்ததாகும் என்றும்,
மற்றொன்றினால் அதாவது, உடலால் செய்வது,
செய்தது ஆகாது என்று, ஸ்ரீமஹான்கள்
சொல்வதை, சற்று உள் நோக்கி, உணர்ந்தால்,
உடல் = தூலம்! மனம் = சூட்சுமம்!
சூட்சுமமான எண்ணத்தின், அரிசி, பருப்பு (உரலில் இட்டு)
முதலியவைகளை தூலமான உடலால், இம் மனமாகும்! இக்கர்மா
செய்து, கர்மா பெருக்கம் செய்வது, பற்பல நாமரூப, பட்சணங்
பெருக்கம் என்பது, அனைத்துமானவை, அப்பட்சணங்களை, மற்றும்
களாக, செய்யப்படுவதாகும்! அப்பட்சணங்களை புசித்துவிட்டால்,
ஒர் ஜீவன், வினைசம்பந்தம் கொண்டு, விகாரம் அடைந்து, மேலும்
அவர்களை, அன்னியமாய் கண்டு, அவ்வெண்ணங்களை,
எண்ணங்களை, பெருக்கும்போது, ஜனன மரணம், உண்டா இறப்பென,
அனுபவிப்பதற்காக,
ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!
இதற்கு ஒரே வழி, நமக்கு அன்னியமாய்,
எதுவும் இல்லை என்ற, நிலை பெறவேண்டும்! அந்நிலை பெற,
நாமரூபங்களை, இல்லாமல் செய்தாலன்றி அந்நிலை பெறமுடியாது.
ஆனால், அனைத்து நாமரூபங்களும், மன எண்ணத்தால், வருவதால்
பதிந்த, ஒன்றுகிறது! எனதென், மறந்தாலும், மறக்க முடியாது
தான்! இதை உணர்!
அரைக்கப்படுவது அரிசி! அதனால் வருவது மாவு ஆகும்!
மாவால் உருவகப்படுவது, பலரக பட்சணங்கள்! ஆகும்!
இம்மூன்றையும்:- கர்மா என்றும்! கர்மாவின் செயல் என்றும்!
கர்மாவின் பலன் என்றும் கொள்ள வேண்டும்!
மனதை கர்மாவின் இம்மூன்றையும், மாயாவை கர்மா என்றும்,
செயல் என்றும், புண்ணிய பாப வினைகளே, பட்சணங்கள்
என்றறிவியல் பெருக்கெடுக்கின்றன!
இதை உள் உணர்ந்து நோக்கினால்:- பட்சணங்களின் சுவையை,
மறக்கவும் முடியவில்லை! மறுக்கவும் முடியவில்லை! விலக்கவும் முடிய
வில்லை! விட்டொழிக்கவும் முடியவில்லை! ஆனால் நன்கு உணர்ந்தால்!



"அந்நியனை" கண்டால்;
ஆசை, மோகம், காமம், வெறுப்புணர்வு
உண்டாவது இயல்பே!
நம் "தந்தையாக" கண்டால்,
மேலே சொன்ன, தோஷ குணங்கள் வர முடியாது! வரக்கூடாது!
வரவியலாது! இவைவே இல்லை யெனலாம்! ஆகவே,
வாய்ஞானமாக:— நாமரூப:— உடல் இல்லை! கருவி கரணம்
இல்லை! ஜகத் இல்லை! கர்த்தாக்கள் இல்லை! இல்லை! இல்லை! பயன
கல்ப கோடிகாலம், சொன்ன ருஷம், அவை இல்லாமல் போய்
விமோ?! அவை அனைத்தும், உன்முனைப்பின், பின்ன எண்ணங்களோ!
ஆறல், "எல்லாம் நீயே" என்ற, இந்த ஒரு ??????
மஹாவாக்கியமானது, (மஹாமந்திரமானது)
(1) அனைத்து தேவ தெய்வங்களுக்கும் பொருந்தும்!
(2) அனைத்து ஜீவ கோடிகளில், நிறைந்திருக்கும், ஆன்மாவுக்கும்
பொருந்தும்!
(3) கண்ணால் காணக்கூடியதும், கருத்தால் உணரக்கூடியதுமான,
அனைத்து அண்ட, பிண்ட, பிரம்மாண்டங்களிலும், நிறைந்திருக்கும்,
பரமாத்மாவுக்கும் பொருந்தும்! மேலே சொன்ன, வாய் ஞான
மானது, தனக்கு அந்நியனை, நாமரூபங்களை காண்பதாகும்!
அனுபவ ஞானமாக:— அனைத்து நாமரூபங்களையும், நம்மை
கற்பனை நாமரூபமான, ஸ்ரீ பகவானே, நம் தந்தையாகி,
அவனே பொருளாகவும், அவனே செயலாகவும், அனைத்தும்
அவனாகவும், உணர்ந்து கொண்டால், சூட்சுமமானதை,
சூட்சும தோஷ குணங்களை, சூட்சும ஸ்ரீ பகவானிடம், கொடுத்து விடுவது!
அரிசியும் இல்லை! மாவும் இல்லை! பட்சணங்களும் இல்லை!
இம் மூன்றும், இல்லாத் தன்மையில், நாம் அது! அதுவே நாம்!
என நிச்சயிப்பதை, தடை செய்பவையும், இல்லாத் தன்மையில்,
நாமே நாமாக, சும்மா சுகமாக இருக்கலாமே!





விசார ஞானம் இருந்தால், நாம ரூப, ஜகத்
ஜீவ ஸிவ ரூபங்கள், சுகமாகவும், அழகாகவும்,
தோன்றும்! அவிசாரத்தினால்! அதாவது, விசார
ஞானம் இல்லையானால், நாம ரூப, ஜகத் ஜீவ,
ஸிவ ரூபங்கள், துக்கமாகவும், கலக்க பயமாகவும்
தோன்றும்! இதன் காரணம், என்னவென்றால்?

(1) விசார ஞானம் :- மேலே கூறிய, நாம ரூப, ஜகத் ஜீவ,
ஸிவ ரூபங்கள் அனைத்தும், முணையாகும்! மாயாவில் தோன்
றிய இந்த மனமானது, விளையாடவே வந்தது. ஆனால் அவ்
விளையாட்டை, விளையாட்டாகவே கருதாமல், வினையம்
(புண்ணிய பாவம்) என, ஆக்கிக் கொண்டது. இவ்விந்த,
மாயாவின் சிருஷ்டியை, தம் மறைமைய கற்பனையினால்,
அழகு, வசீகரம், கவர்ச்சி, சுவை, இன்பம் எனும் பல நிலைகளில்,
உருவகப்படுத்தி, அந்த மாயா சொரூபங்களும், அம்
மாயாவின், அதிபதியான, ஸ்ரீ பகவானுடையதாக, கரு
தாமல், நான் என்றால் என்ற அதிகார ஆதிக்கத்தாலும்,
என்னுடையது என்ற, உரிமை, உடைமை இவைகளின்,
அபிமானத்தையும், பின்னிப் பிணைந்து, விளையாடியதால்,
வினைத் தொடர்பும், அதனால் ஜனனமரணம் உண்டாகிறது.
என உணர்ந்து, நான் என்பதை, விட்டு எல்லாம் நீயே!
எல்லாம் உனதே! என ஸ்ரீ பகவானின், சிருஷ்டியை ஸ்ரீ பக
வானிடமே, விட்டு விட்டு, அவன் கைப்பதுமையாகவே,
இந்த உடலை யாக்கிக் கொண்டால், விளையாட்டு, விளையாட்
டாகவே முடியும். வினையம் (புண்ணிய பாவம்) தொடராது.
வினை தொடராத் தன்மையால், ஜனனமரணம் இல்லவே இல்லை.
அந்த நிலையால், மறைபரம் என்ற நிலையால், மன அழுக்கும், இல்
லாத தன்மையால், அந்த மனதை, நாம் அது! அதுவே நாம்!
என, சும்மா சுகமாக, இருப்பதுவே, விசார ஞானமாகும்!



உ 65

விசார ஞானம் இல்லாத, அவிசாரமும்:—

நாமரூப, ஜகத், ஜீவ, உறவு சுற்றம் நட்பு, பொன் பொருள், பணம் தொழில், குடும்பம், இவைகளில், நான், என்னால், என்னுடையது! என்ற போதை மோகத்தில், சிக்கிக்கொண்டு, கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! உண்டதே இன்பம்! என இக்கலியின், கொடூர ஒணஞ்சிகின்ற, உரைமுடியாமல், குடும்பம் என்ற ஸம்ஸார மயக்கத்திலேயே, சிக்கி இருப்பது அவிசாரம் என்னும், விசார ஞானமில்லாமையாகும்! இதனால் சஞ்சலம், சங்கடம், துக்கம், கவலை பயமும் கொண்டு, ஜனனமரண, படுகுழியாகும்!

மனோஜயம் என்பது:— மனோநாசமாகி, மனம் மறந்ததாக வேண்டும்! மனம் மறந்ததாக வேண்டுமென்றால்? மனோ வியாபாரத்தை, அணு அணுவாத விட வேண்டும்! என ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். மனோ வியாபாரத்தை, விடவேண்டுமென்றால்? வினையால் வரும், காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும், வார்த்தைகளையும், (காண்பதையும், கேட்பதையும்) அப்படியே, உண்மையென நம்பி விடாமல், வினையால் நிகழும், முன்வினை, பின்வினை, இவைகளை, சற்று இறை குரு கருணையுடன், பொறுமையுடன் காத்திருந்து, நிதானமாக, உணர்ந்தால். அவசியம் அதன் உண்மை புரியும்! அம்மனம், விகாரம், விபரீதம், விநோதம், விசித்திரம், வீராவேசம், இவைகளை அடையாமல், சற்று பாதுகாக்க வேண்டும்! இது, இறைகுரு நம்பிக்கையால், கருணையால் அவசியம் முடியும்! இது இந்த ஏழையின், அனுபவமாகும்! இம்மனோ கவலை பயம், உண்டாவது நான் என்னால் என்னுடையதால் " தெளிவின் ஆனந்தம், உண்டாவது, எல்லாம் நீ! எல்லாம் உனதே! என்ற சமர்ப்பணமாகும்.



# உ

(66)

(1) எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என நாம் அடங்கி, பிறரை அடக்காமல், இருப்பது மனோஜயமாகும்!

(2) இருப்பதில்! கிடைப்பதில்! நடப்பதில்! இது ஸ்ரீபகவான் கருணையே என, பூரண திருப்தி, அடைவது மனோஜயமாகும்!

(3) உறவு, சுற்றம், நட்பு, ஆண், பெண், என்ற நிலையில், விருப்பு வெறுப்பு கொள்ளாமல்! எல்லாம் நம்மவர்களே! ஸ்ரீபகவானின் குழந்தைகளே! என, உணர்வது மனோஜயமாகும்!

(4) எதைக் கண்டாலும்! எதைக் கேட்டாலும்! அங்கு எந்த குற்ற உணர்வும் இல்லாமல், மாயாவின் காரியம், ஒழுங்காக நடைபெறுகிறதென, ஆனந்தமாக ஏற்றல், மனோஜயமாகும்!

(5) மண், பொன், பெண், மயக்கத்திலே இருந்து, கண் கெட்ட மாடு போல், கலங்கினேன் ஆரணமே! என்ற ஸத்தியவாக்குப்படி, அம் மூன்றிலும், மயக்க கலக்க பயம் இல்லாமல், எல்லாம் மண்ணே! என மயக்கம், அறுத்து இருப்பது மனோஜயமாகும்!

(6) திட்டமிட்ட காரியங்கள், திட்டமிட்டபடி, ஒழுங்காக நடைபெறுகிறதென, உணர்ந்து, நடப்பதையும், வருவதையும், நலமாக ஏற்பது, மனோஜயமாகும்!

(7) பேரிடியிலிருந்து, உடலே இறைந்தாலும், உலகமே நிர்மூலமானாலும், கலங்காத மனதுடனே, எல்லாம் நலமே என சுகமாக ஏற்பதுவே, மனோஜயமாகும்!

(8) முழு கவச சக்தியுடன், பிறரை கவனிக்காமலும், தன்னை பாதுகாக்கவேணுமென்றதன் காப்புசக்தி இல்லாமலும், எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாதென்றும்! நாம் அவனே என்று, தன் கவசசக்தியுடன், இருப்பது மனோஜயமாகும்!



9. நடந்ததை எண்ணாமலும், நடக்கப் போவதை கற்பனை பண்ணாமலும், நடப்பதை இது ஸ்ரீபகவான் கருணையே! இது நன்மையென அடங்கி இருப்பது, மனோ ஜயமாகும்!

10. ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு, கோபாவேசம், மோஹாவேசம், விரோத குரோத தாபம், எந்த விருப்பும், கலக்கமயம், ஆகிய இந்த எட்டும் இல்லாமல், அமைதியான், ஆனந்தமாக, ஏற்று இருப்பது மனோ ஜயமாகும்!

இப்படி பத்து நிலைகளிலும், மனோ ஸாந்தி ஏற்பட்டால், அங்கு ஞானசூரியன் பிரகாசிப்பான்! அஞ்ஞான இருள் மறையும்!

குறிப்பு:- மேலே கூறிய, பத்திலும், ஒன்றிலேனும், சிரத்தையுடன் ஏற்றாலும் பத்தும் வசமாகும், இது ஸத்யம்! ஸத்தியம்! ஸத்தியம்! இப்படி மனோ ஜய நிலையில், சும்மா சுகமாக இருக்கவேணும்!

சாதகமான பாவனையை, செய்து வந்தால், சஞ்சலமான மனதை, வெல்லலாம்! எப்படி என்றால்?:- உடல், உலக, உறவு, சுற்றம், நட்பு, பொன், பொருள், போக, மோஹ நாமரூபம், அனைத்தும், நம் மனமே கற்பனையால், விளைந்ததேயன்றி, அவைகள் தாமாக, நம்மை தேடி வர வில்லை, என்று உணர்வு அவசியம் வேண்டும்! அனைத்தும் மண்ணே! இதுஸத்தியம்! மண், மலை, கல், ஜலம், மரம், செடி கொடி புல் பூண்டு! ஆகியவைகளை, நாம் விளையாடும் நிமித்தமாக ஸ்ரீபகவான் ஒளிந்துவிட்டு, அவை அனைத்திலும், அவன்



உ

சர்வாந்தர்யாமியாக, நிறைந்து
இருந்து கொண்டு, நம் மன விளையாட்டை
எப்போதும் இல்லாமல், விருப்பு வெறுப்பு
இல்லாமல், சாட்சியாய் சரி பார்க்கிறது!
ஆனால் இம்மனம் படைத்த, மனிதராகிய
நாம், அவனை மறந்து விட்டோம்! நான், என்றால்,
என்னுடையது என, மோகம் கொண்டு, அம் மோக
போதையால், அப்புண்ணியபாப வினைகள், அத்தனையும்
நாமே, வலிய ஏற்றுக் கொண்டோம்!

நம்முடைய கவனக்குறைவால், இம் மறைமய,
மயக்கத்தை மாற்ற, எல்லாம் நீயே! என சர்வார்ப்
பணமாக, விருவ தேசாதகமான, பாவனையாகும்!
இதைவ், எல்லாம் நானே! எல்லாம் என்றால்! எல்லாம்
என்னுடையதே! என கர்த்ருத்வத்தால் வரும், குண
தோஷம் அகங்காரம், ஸ்ரீபகவானுடைய சர்வார்ப்பணத்தால்,
பஸ்பமாகி விடும்! இச் சர்வார்ப்பணத்தால், சர்வசகா
சவனமால், சலிப்படைகின்ற மனமானது, சஞ்சலம் இல்
லாமல், அமைதி பெறும்! இப்படி அமைதியான மனமிரு
நாம் அது! அதுவே நாம்! என அம்மா, சுகமாக இருக்கலாமே!

நமதுமதே முயற்சி என்பது! மறைமய, குண
தோஷம், நிவர்த்தி ஆகும் நிமித்தம், முன்னே சொன்ன
சர்வார்ப்பணம், அவசியம் தேவை! மறைமய, குண
தோஷம், நிவர்த்தி ஆகி, மனம் அமைதியும், ஸ்வாதந்திரியமாகவே
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்றாகிவிடில்,
எல்லாம் ஒன்றே! அது நானே! நானே அது! என்ற பர
பாவனையால், சொல்லும் செயலுமற்று ஏகாந்த நிறைவும்
அம்மாவே, சுகமாக இருக்கலாமே!



கனவு நனவு இவைகளில் உணர்வது:—
கனவின் பொருள்கள், நனவில் இல்லை!
நனவின் பொருள்கள், கனவில் இல்லை!
கனவில், நாமரூப பொருள்கள், நம்மை நாடி
தேடி, வருகின்றன! நனவில், நாமரூப பொருள்
களை, நாம் நாடி தேடிச், செல்கிறோம்! கனவின் காட்சி
உள்ளே! நனவின் காட்சி வெளியே! கனவை, விழிப்பு
நிலை வந்தவுடன், பொய்யென உணர முடிகிறது! ஆனால்
நனவின் காட்சிகளை, உடனே பொய்யென உணர முடிவதில்லை
கனவில் மனம் மட்டும் அனுபவிக்கிறது! ஆனால் நனவில்
மனதுடன், தூலமும் பின்னிப் பிணைந்து, அனுபவிக்கிறது.
நாம் நனவில், தூலசம்பந்த, நாமரூப பொருள்களை,
ஸத்தியமாக நம்புவதால், அவைகளை உடனே பொய்யாய்,
நம்ப முடியவில்லை! ஆனால் கனவின் காட்சிகளில், மனோ
சம்பந்தம் கொண்டிருந்தாலும், வினைசம்பந்தம் இல்லை!
நனவில் மனமும் தூலமும், பிணைந்து இயங்குவதால், அங்கு
வினைசம்பந்தம், உண்டாகிறது! வினைசம்பந்தமே,
உலகம்! உலகமோ வினையால், பின்னிப் பிணைந்து, வினை
யாலும் ஒன்றும்! ஆதலே வினை சம்பந்தம், ஜனனம்
மரணம் ஆகும்! ஆகவே வினைசம்பந்தம், கொண்ட நனவை
மறக்கவும் முடியாது! மறுக்கவும் முடியாது! மாற்றவும் முடியாது
ஆனால் நனவின், நாமரூப, ஜகஜீவ, உறவு சுற்றம் நட்பு,
பொன், பொருள், போகம் அனைத்தையும், மண்ணாகவே,
மனம் உணர்ந்துவிட்டால், காட்சிகள் அனைத்தும்,
பொய்யாகிவிடும்! அப்படி எல்லாம், மண்ணாகவே உறுதி
செய்வதற்கு, ஸ்ரீபகவானின் சர்வார்ப்பணமே முக்கியத்து
வம் பெறுகிறது. எல்லாம் மண்ணாகி விட்டால், வினையின்
பெருக்கமும், மோகமும், இல்லாத தன்மையுறவு, மனம்
மரத்தாகவே இருக்கும். அம்மனது, எல்லாம் ஒன்றே!
அது நானே, நானே அதுவென அம்மா சும்மாக இருக்கலாமே!



உ

(70)

அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம்! அகமே
எல்லாம்! என்ற இந்த பிரம்மானுபவத்தை,
மனதால் செய்து, மனம் மறுக்காது இருந்து,
எந்த வருத்தமும், கஷ்டம் கவலையும்,
சஞ்சலமும், துயரம் துக்கமும், கலக்கம் பயமும்,
இல்லவே இல்லை! ஆதலால்

ஜென்மவாச கோடிகளின் பழக்க வழக்கமும், மது உண்டவன்
எப்படி, மதுவை மறக்க முடியவில்லையோ, அப்படி ஒர் வெறி
யால், அகப்பட்டுக் கொண்டதால், மறக்க முடியவில்லை!
இதற்கு
ஸ்ரீ பகவான் திருவை, பெறுவதன்றி, இவ்வெறி தொலையாது!
இம்மது வெறி தெளியவே, நான் என்றால் என்னுடையது!
என்ற அஹங்கார அதிகார, ஆசக்தி, உரிமை, உடைமை
மானவமானம், க்ரோத, சுரங்க வஞ்சனை, வெட்கம், இவைகள்
நாம் அறியாமையால், அவைகளை தொட்டோம்! ஆதலால்
அவைகள் நம்மை விடாமல், பற்றிக் கொண்டன!! இம்
மது வெறி சாம்பலாக வேண்டுமானால், எல்லாம் நீயே!
எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என ஆவதன்றி இதை
அழிக்க, வேறு மார்க்கம், எதுவும் இல்லவே இல்லை! ஆகவே
நான், என்றால், என்னுடையதை முழுமையாக விட்டுவிடுவதில்,
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!
என்பது, பரிபூரணமாகிவிடும்! அல்லது!
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையது!
முழுமையாக பற்றிக் கொண்டால் மறுவினாடி! நான், என்றால்
என்னுடையது, சாம்பலாகி, நாசமாகிவிடும்! இதில்
ஒரு தேனும், ஒன்றை செய்வது அதி அதி அதி அவசியமாகும்!
இந்த அவசியமான, மார்க்கத்தால், மனம் மறுக்காது,
நாமே அது! அதுவே நாம்! என ஸ்வயானுபூதி பெற்ற,
தன்மையினால், நாம் சும்மா, சுகமாக இருக்கலாமே!



உ

வேதம், வேதாந்த சாஸ்திரம், உபநிஷதம், மற்றும் கோடானு கோடி, பாடம், படிப்பு, இவைகளை கற்றுக் கொள்வது, அனுபவ கல்வி அல்ல! அவை "சமையல் கல்வி" ஆகும்!

முன் கூறிய நிலைகளில், தோஷ குணங்களை எப்படி எங்கே விட்டு விட்டு, அதை எப்படி தொடுக்க வேண்டுமோ அதை அப்படி தொடுத்து விட்டு! அங்கு அத்தோஷ குணங்களும், இல்லாமல், தத்; த்வம்; அஸி! என்ற உபதேச வாசகத்தின்படி, தத்பத ஈசனும்! த்வம்பத நாமும்! (ஜீவாத்மாவும்)! அஸிபத பரம் பொருளும்! "ஒன்றே" என நிலை பெற்று, பிரம்மானந்தம் பெறுவதே!" "சாம்பும் கல்வி" ஆகும்!

குற்றம் குறைகளை எப்படி நீக்க வேண்டும் என கற்கும் கல்வியே கல்வியாகும். அதுவே ஸ்வய அநுபவமாகும்.

இக்கல்வியைப் பெற, குற்றம் குறைகளை "நீங்கிப்படி" என்பதை விட! "நீங்கப்படி" என்பதே சாலச்சிறந்தது! ~~இதுவே சாம்பிகைக்கல்வி!~~

சாம்பும் கல்வி என்பது, ஏட்டிலும், வாக்கிலும் வராது! அனுபவத்திலேதான் வரவேண்டும்! உண்பவன் பேசமுடியாது! பேசுபவன் உண்ணமுடியாது! உண்டவன் உறங்கமுடியாது! அதாவது ஆனந்த மறைவைத்தை ஒழிக்கமுடியாது! உண்டவன் எழமுடியாது! அங்கே, ஆனந்த மறைவதில்லை! அப்படி அனுபவத்திலே, உணர்ந்து அது வேறாம்! நானே அது! என அம்மா, அகமாக இருக்க வாமே!



உ



குறைவு நிறைவு இல்லாதது என்றும்;
தெரிவு, மறைவு இல்லாதது என்றும்;
ஆக்கம் அழிவு இல்லாதது என்றும்;
ஆதி, அந்தம், நடு இல்லாதது என்றும்;
பந்தம் மோட்சம் இல்லாதது என்றும்;
ஜீவ ஈச கர்த்தத்துவம் இல்லாதது என்றும்.
இல்லை என்றும்! உண்டு என்றும்! சொல்ல முடியாதென்றும்;
சொல்ல இயலாததென்றும்! உள்ளதாம் **பர** வஸ்துவை!
நாம் அது! அதுவே நாம்! என ஒரே நோக்கத்தினில்,
நாமே அதுவாகி, சும்மாவே சுகமாக இருக்கலாமே!

நாமரூப, ஜகஜீவ, சொரூப உலகில் குணதோஷங்களாம் பின்னவிட்டு, சர்வசுதா சலிப்படைகின்ற மனதை, பூர்வபுண்ணியத்தால், சர்வார்ப்பண நிலையால், முதிர்ச்சி அடைந்த, சாதகன் ஒருவன், சர்வசதாவும்,
அகம் பிரம்மம்! (யாமே பிரம்மம்) பிரம்மம் அகம்!
(பிரம்மமே யாம்) அகமே எல்லாம் (யாமே அனைத்தும்)
எல்லாம் அகமே (அனைத்தும் யாமே!) என்ற, பிரம்மான் பாவனையை, இடையறாது, தைலதாரை போல், தியானிப்பாறகில், இந்த **பரமாத்மாவே!**
அவனுக்கு, ஸ்வய அனுபவத்தை, கொடுத்து, பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தியை கொடுக்கும், என ஸ்ரீ அனுபவ மஹான்களின், வாக்கு இருக்கிறது! இப்படிப்பட்ட சாதகன், செய்பவனின், மனமாகிய மனத்தின் அறிவானது,

ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளுக்கும் **நாமே** ஆத்மா!
ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள் அனைத்தும் **நமக்கு** ஆத்மா!!



73

# உ

என்ற, உறுதி குலையாத! திட உணர்வு கொண்டு! மஹாமேரு போல், அசைக்க முடியாத!

# திடப்ரக்ஞன்

ஒருவனுக்கே முடியும்! இக்கலியுகத்தில் ஏனையோருக்கு, முடியாததாகும்! இயலாததாகும்!! ஆனால் இக்கலியில், திடப்பிரக்ஞன் என்ற, ஞானியை

# போல்

(போலியாய்) ஞானிகள் உண்டு! அதை அவர்கள் வாக்கின், ஜீவமாகவே உணரலாம்! இதையே, மூன்று சூரியது போல், சுமக்கத் தெரிந்தவர்களாகும்!

# சாப்பிட

முடியாதவர்கள் என்றும்;
இயலாதவர்கள் என்றும்;
(அதனால்)
கவக்க பயம் உள்ளவர்களென்றும்;
பணம், பட்டம், பதவியில், சிக்கிய வர்களென்றும்;

சாப்பிட்டதால் நாம் என்ன ஆவோம்? நாம் எப்படி இருப்போம்? உலகில் நம் மதிப்பு மரியாதை என்னவாகும்? என்ற சந்தேகங்களும்!

கலியுக சிறப்பைப் பற்றி கூறுகையில், யுகயுக, ஸ்ரீ மஹான்கள் சொல்லக், கேள்விப்பட்டிருக்கிறோம்! அன்பர்களுக்கு, ஓர் உறுதியான வைராக்கியம் வேண்டும்?

(1) நாம் பிறப்பு இறப்பு அறுக்கவே வந்தோம்! என்றும்;
(2) நாம் ஸம்ஸார ஸாகரத்தில் உழல வரவில்லை! என்றும்;
(3) போட்டி பொறாமையால், பட்டம் பதவி பெற வரவில்லை! என்றும்;
(4) பிரியம் வேண்டாம் என்றும்; சிரேஷ்டமே வேண்டும்! என்றும்;
(5) கால பயம் வேண்டாம்! காலாதீத நாம் ஆவோம்! என்றும்;

எண்ணம், சொல் செயலால், உறுதி வைராக்கியம் கொண்டு, அவ்வுறுதி வைராக்கியமானது, [illegible] போதும்! என்ற நிறைவோடு, நாம் பூரணமாகி, சும்மாவே சுகமாக இருக்கலாமே.



உ

(74)

கீதையில், 18 விதமான கீதை உண்டு என ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்! கீதை என்றாலே, ரஸாஸ்வம் என, சொல்வதுண்டு. ஸ்ரீமத் பகவத் கீதை என்றால், ஸ்ரீபகவானின் ஸ்வய அனுபவ ரஸாஸ்வம், எனப் பொருள் படும்! அதைபோலவே, ஸ்ரீமத் ரிபு கீதை என்றால், ஸ்ரீரிபு மஹரிஷியின், அத்வைதானுபவ ரஸாஸ்வம் எனப் பொருள்படும்! இதைப் போலவே, அனைத்து கீதைகளும், அந்த ஸ்ரீமஹான்களின், அனுபவ ரஸாஸ்வம் ஆகும்!

இக்கலியுகத்தில், மேலே சொன்ன கீதைகளை, படிக்கும் போது, அவர்கள் நிலை எப்படி இருக்கிறது என்றால்?

(1) கீதையின் ஆசிரியரை (ஸ்ரீமஹான்களை) அனேக விளக்கங்களுடன், படிக்கிறார்கள்!

(2) கீதையின் உட்கருத்தை, பல்வேறு கோணங்களில், "விரிவாக்கம்" செய்கிறார்கள்!

(3) அவ்விரிவாக்கத்தினால், பணம், பட்டம், பதவி, கௌரவம், அந்தஸ்து, மதிப்பு, மரியாதை பெறுவதையே, தம் "லட்சியமாக" கொள்கிறார்கள்!

(4) கருத்துரையில் "உள் ஆழ்ந்தால்"! நாம் இருக்க மாட்டோமே! அதாவது நம் நிலை அடிஅடி "கேவலமாய்" (ஆத்ம சாக்ஷாத்காரமாய்) ஆகி விட்டால், நம் நிலை என்னவது? என்ற பயப்பிராந்தியால் (ஸத்குருவாக ஆகிவிட்டால்) கருத்தை விரும்புவதில்லை!

(5) கீதையின் கருத்தின், அனுபவம் பெற்றுவிட்டால் "பிரகாசிக்கும் குருவாக" இருக்க மாட்டோமே! நாம் பலகாலம் படித்து, பட்டம் வாங்கிய படிப்புக்கு மதிப்பு மரியாதை வேண்டாமா? எனக் கருதி விட்டுவிடுகிறார்கள்!



(A) ஸ்ரீபகவத்கீதையில், எமதய்யன் திருடனாகிய கண்ணன் சொல்வதாவது:- நீ பாபிகளுக்கும் மஹாபாபியாக இருந்தாலும், கஷ்டம், கவலை, மனோபய மயக்கம் வேண்டாம் என்றும், உனக்கு "ஞானமாகிய ஓடம் தருகிறேன்!" ஆதலால் சம்சார சாகரகடலைத்தாண்டி, பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தியை, அடைவாய் என ஆணித்தரமாக, அமுதமொழி தருகின்றான்!

(B) ஸ்ரீமத் ரிபுகீதையில், எமதய்யன் ஸ்ரீ ரிபு மஹான் கூறுவது மாடலில்:- நிறைவுறும் நிஷ்டையுள்ளோர் நீசரேனும் நிர்மலமாம் பரமாகி முக்தராவர்! எனச் சொல்லுகிறேன்! இதை சற்று உன் உணர்ந்து கவனிக்க வேண்டும்!

(1) லௌகீக தர்மநிலையில், பாவம் செய்யாதே! என்றும், புண்ணியம் தேடு! என்றும், பாவம் செய்தால், ஈனபிறவியும், கடுந்தண்டனையும், ரௌரவாதி நரகம்! எரி நரகம்! கும்பிபாக நரகம்! என்றும் பல நரகங்களை, அட்டிக்காட்டி, பய முறுத்துகிறது!

(2) வைதீக தர்மநிலையில் புண்ணியம் தேடினால் உயர்பிறவியும், வசதி உள்ள பிறவியும், தெய்வ பிறவியும், கைலாயம், வைகுண்டம், பிரம்ம லோகம் போன்ற பத முக்தியும், போகபிறவியும், சொர்க்காதி போகமும் கிடைக்கும் என்று, பக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது!

(3) பரமார்த்திக நிலையில், மேலே சொன்ன, இரண்டுமே, மனோமயகற்பனை யென்றும், இங்கு புண்ணிய பாபமோ! சத்திய தர்மமோ! வேறு எந்த கட்டுப்பாடோ, இல்லை யென, வலியுறுத்திக்கூறி, பிறவா நிலையென்ற, ஜீவன் முக்தியும் பெறுவாய் என, ஆணித்தரமாக கூறி பஞ்சமஹாபாவம் என்னும், ஸ்ரீஹத்தி! சிசுஹத்தி! குருஹத்தி! கோஹத்தி! பிரம்மஹத்தி! இவைகள் செய்திருப்பினும் பரமாகி ஜீவன் முக்தி பெறுவான், என அறைகூவி அழைக்கிறது!





மேலே கூறிய இவை பற்றிய ஓர் அரிய விளக்கம்!
ரிபு கீதையார் 4/8 வது பாடல் உணரவும்!
இப்பாடலில் மனதின் திறமையையும்!
மனதின் நிலையாமையையும்! சித்தரித்து
காட்டுகிறார் எம் ஸ்ரீ ரிபு மஹான்!

(1) சொல்லும் மலின வாதனையும் மனதின் தர்மம்!

(2) சுத்த பர வாதனையும் மனதின் தர்மம்!

(3) அலக்கும் ஒரு வாதனையும் பரத்திற்கு இல்லை!

(4) ஆதலினால் அம்மயமாய் நிஷ்டை சார்ந்து,

(5) மலின மென சுத்த மென மதிக்கப்பட்ட,

(6) மனதுடைய வாதனைகள் ஒன்றும் இன்றி,

(7) சலனமில்லா சிலை போலும், காஷ்டம் போலும்,

(8) சற்றேனும் சலியாமல் சுகித்து இருப்பாய்!!!

(1) லௌகீகத்திலும், மனதை அசைத்து சலிப்படையச் செய்கின்ற, தர்மாதர்மம் உண்டு (புண்ணிய பாபம்)

(2) வைதீகத்திலும், மனம் அறிவாலும், அதை சிறிது அசைத்து, மாற்றம் செய்யும், தர்மாதர்மம் உண்டு (ஸத்திய தர்மம்)

(3) பரமார்த்திகம், எனச் சொல்லும், அகண்ட பாவனையாகிய, சர்வ சாட்சியில், மனமும் இல்லை! அறிவும் இல்லை! அங்கு அசையாதது, அசைக்காதது, சலியாதது, சலிப்படைய செய்யாதது, மாறாதது, மாற்றாதது, ஸ்திரமான| நேர்மையான| தன்மைத்தாம் உறைந்ததான **பேரறிவு** ஒன்றே உள்ளது!





(4) நிஷ்டை என்றுவே, நீ இஷ்டப்பட்டாலே அதாவது, நீ முயற்சி செய்தாலே "அது"
உன் இச்சாரும்! உன் முயற்சியாவது,
எல்லாம் ஒன்றே! அதுநவமே! அது நாமே!
இதுவே உன் முயற்சியாகும்! உன் மனமால்
(5) யோகம் என்றும், தெய்வீகம் என்றும்,
கற்பனை செய்து "கற்பிக்கப்பட்ட",
(6) மனோமய கற்பனையை "நாசம்" செய்து ஒழித்து,
விட்டு, ஒன்று மனோமயமான, கற்பனை எண்ணத்தை விடு!
அவ்வது அதுவே நாம்! நாமே அது! என உறுதியுடன் நில்!

(7) உன் வைராக்கியமானது திட சித்தம் எப்படி இருக்க
வேண்டுமென்றால்? குத்துக்கல்லையும்; பட்டமரத்தையும்;
சுட்டிக்காட்டுகிறார்!

(A) "கருங்கல்":— ஆசையென்ற, கடுங் காற்றுக்கும்;
வேகம் என்ற ஜலப் பிரவாகத்திற்கும்; அசையாத் தன்மை
யாயும்! அது நாம்! நாமே அது! என்ற, உறுதியினால் கர்ம வினை
தாவம், பொடிப் பொடியாய் ஜீவ அணுவாகி! ஆத்மாவாகி! பரமாத்மா
வாகி! பரப்பிரம்மமாகி! அந்த ஒன்றிலேயே, கலந்து மயமாகி விடும்!

(B) "பட்டமரம்":— சொந்த, பந்த, பாச, உறவு, நட்பு
என்ற பற்று வரவில்லை, "தளிர்" விடாது! காலகதியால்
தகிக்கப்பட்டாலும் தாவம் பொடிப் பொடியாகி! ஜீவ அணுவாகி!
ஆத்மாவாகி! பரமாத்மாவாகி! பரப்பிரம்மமாகி! அந்த ஒன்றிலேயே
கலந்து மயமாகி விடும்! மனம் அறிவாகி! அறிவு பேரறிவாகி!
(8) மேலே சொன்னபடியில், அந்த ஒன்றின் மயமாகி விடும்!
பேரறிவு பரப்பிரம்மமாகி,



உ



இப்படி இந்த நிலையில், 48வது பாடலில்,
குறிப்பிட்டபடி தம் யதார்த்தானந்தத்தில்,
தன்னில் தான், நிலைத்து நின்று விட்டால்,,

## "பஞ்சமஹா பாபங்கள்"

(1) நடந்திருந்தால், அவை அனைத்தும், பொய்யாகிவிடும்!
அதாவது, கனவின் காட்சியென, பலனற்ற ஒன்றாகி நிலைபெறாமல் விடும்!

அல்லது
(2) அப்படி, ஒரு விதி அவனுக்கு, இருந்தாலும், அவைகள் நடக்கப்பெறும்! அதாவது அப்படி ஒரு விதி என்ற, பிராரப்த கர்மாவை, "பர கருணை" அழித்துவிடும்!

இங்கு உங்களுக்கு, ஓர் கேள்வி எழலாம்?
பரம் செயல்படாத, செயல்பட முடியாத, ஒன்றென்று கூறும் தாங்கள், இங்கு பர கருணை, அழிக்கும் எனச் சொல்லும் காரணமென்ன எனக் கேட்கத் தோன்றும்?

(1) அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம்! அகமே எல்லாம்! பிரம்மம் அகம்! பிரம்மமே ஜெகம்! எல்லாம் அகமே! அகவே. அதுவே நாம்! நாமே அது! என்பது ஸத்தியமே!

அங்கு "நாமரூப" ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள், "பொய்! பொய்! பொய்!" என்பது ஸத்தியமே!
இங்கு நீ கூறிய! இங்கு நீ நம்பிய! இங்கு உன்னால் நடப்பது நடந்தது எனச் சொல்லிய "மனமேது? மனதின் கர்மாது?" அக்கர்மாவை, நடத்தும் விதி தேவன் எவன்? எதை வைத்து, எதை நடத்துவான்? ஆகவே வினையும் இல்லை! விதியும் இல்லை! பாவம் சட்டமண்ணே! அது பாண்டம்



செய்யவியலாது. ஆகவேதான், உலக
நியதியில், கூறிய பஞ்சமஹாபாபங்கள்,
எனச் சொல்பவை அனைத்தும், பொய்க்
கதைசொல்பவனும்! பொய்க்கதை கேட்ப
வனும், எப்படியோ அப்படி விளக்கமே!
இப்படி அந்நிலைதாண்டியும், பெற்றவன், முன்பு அறிந்தோ
அறியாமலோ, அவன் வினையின்படி, அப்படி ஓர் பாபம்,
செய்திருப்பானாயின், அப் "பாப" வினைக்கயிறானது,
"எரிந்த" சாம்பல் கயிறு, போன்றதாகும் என,
ஸ்ரீமஹான்கள், அநுபவ வாசகம் இருக்கிறது.
குறிப்பு :— எரிந்த சாம்பல் கயிறானது, கயிறுபோல்
தோற்றும்! ஆனால் அது பிணைக்காது! பிணைக்க முடியாது!
(2) ஆத்மஞான சாதனை செய்து, ஸ்ரீஸத்குரு கிருபையால்,
பக்குவப்பட்டுக் கொண்டிருக்கும், ஒருவனுக்கு, அவன்
வினையின்படி, அதாவது பிராரப்தத்தின்படி பஞ்சமஹா
செய்யவேண்டிய கர்மாக்களிருந்தா
பாபங்கள், ஏதேனும் விதிக்கப்பட்டிருந்தால் ↑ ப்
அவை நடைபெறாமல் இருக்கும் நிமித்தம், ஞானி
களுக்கென, ஸ்ரீபகவானால், நிர்மாணிக்கப்பட்டவர்களான
"அஷ்டதிக்கு" பாலகர்களும் அவைகளை,
"தடுத்து" நிறுத்தவும் முடியும்! "அழிக்கவும்"
முடியும்!
குறிப்பு :— இந்த அஷ்டதிக்கு பாலகர்கள், ஆத்மஞான
சாதகர்களுக்காக, மட்டும் இருக்கிறார்கள் என,
ஸ்ரீ அநுபவமஹான்கள் சொல்லக் கேள்வி!



# உ

(40)

குறிப்பு :- புண்ணியமும் பாபமும் ஒன்றே! இவை மனதின், வேறுபாடும் மாறுபாடும் ஆகும்! பஞ்சமஹாபாபம், எனச் சொல்லும் ஐந்தும், மனதின் "வக்ர"மும்! "உக்ர"மும்! ஆகும் என, ஸ்ரீமஹான்கள் கூறுவர்!

வக்ரம் :- மனவறட்சியாகும்! இது பேராசையின், ஓர் அங்கமாகும்! துன்பத்தையே, இன்பமாக சுவைப்பதாகும்!

உக்ரம் :- மனவெறியாகும்! இது எதிர்பார்ப்பின், ரௌத்ரம் ஆகும்! சாந்தி, அமைதி, பொறுமை, இவை மூன்றையும், எதிரியாக கொண்ட, அரக்க குணமாகும்!

48 வது பாடலில் கூறியபடி, ஸ்ரீ ஸத்குருவின் வாக்கிய சித்தத்தை, சிரம் மேல் கொண்டு, நாம் அடங்கி, உவதையும் அடக்காமல், பிறரையும் அடக்காமல், அதுவே நாம்! நாமே அது என, சும்மாவே சுகமாக, இருக்கலாமே!

தான் தானாக, தனித்திருப்பவனும், தம் ஆத்ம சுகத்திலேயே, லயித்து சுகித்திருப்பவனும், தமக்கு அன்னியமாக, "நாமரூப" ஜகத்தோ! ஜீவர்களோ! ஈஸ்வராதிகளோ! இல்லவே இல்லை என்றும், நாமே மேலே கூறிய, அனித்தமாக இருக்கிறோம் என்றும், அவைகளுக்கு எந்த பெயரும் இல்லை, எந்த ரூபமும் இல்லை, ஆனால், வாக்கால் விளக்குவது என்றால் பரசொரூபம் என்றும் வாக்கு விளக்கம், இல்லை என்றால், அதை "இல்ல" என்று சொல்வாரும் இல்லை! அதை ஏன் எனக் கேட்பாரும் இல்லை, கேட்கும் நிலைக்கு அங்கு ஓர் பொருளும் இல்லை! யார் யாரிடம் சொல்வது என்றும்? இப்படி பகுப்பற்ற ஒன்றை, அதுவே நாமாக, இருக்கிறோம் என, அமைதியின் ஆனந்தமாக, இருப்பதுவே சும்மாவே சுகமாக இருக்கும் நிலையாகும்!



உ

(81)

அப்படிப்பட்ட, ஓர் திட ஞானியின்பார்வை, பட்டமாத்திரத்தில்

"அறம்" மேலோங்கும் என்றும்,

"அறம்" அழிந்து நாசமாகும் என்றும்,

சொல்வது "உபசார" வசனமும்! "உபகார" வசனமும்!

ஆகும் என, ஸ்ரீமஹான்கள் தம், அனுபவமாக சொல்லக் கேள்வி!

உபசாரவசனம் :— ஆன்ம ஞான சாதனையில், பக்குவம் ஆகி கொண்டிருப்பவனுக்கு, இது உபசார வசனமாக இருந்தாலும், விஷயாதி குணதோஷங்கள், அவனை பீடிக்காவண்ணம், அவ் வசனம், அரணாக அமையும்!

உபகார வசனம் :— ஆத்ம ஞானசாதனையில், உள்ள உருக்கமும், கண்ணீர் பெருக்கமும், காலம் வீணாகிறதே என்ற ஏக்கமும், அவனை உணர்ந்து, அவனே தானாகி! தானே அவனாகி! அங்கு அவன் தனியே இல்லாமையினால், அதனில் அன்பை பெருக்கவும், நாமரூப ஜகத்தில் இதுகால பரியந்தம், அனுபவித்தது எல்லாம் போதும் என்ற நிறைவைப் பெற்றவனுக்கு அது உபகாரம் ஆகும் என்றால் அந்த சூட்சுமமே அறம் மேலோங்கிய தன்மையினால், அந்த சூட்சுமமே அறம் அழிந்து நாசமாகும்!

இந்த நிலை பெறுபவனுக்கு, எந்த நிஷ்டா சாதனமும், தேவையும் இல்லை! அவை பயன் தரவும் செய்யாது! அவர் நடைப் பிணமாய் இருப்பான்! அவன் பொருளற்ற பார்வையும் விகாரமில்லா கேட்கும் நிலையும்! இறை குரு உணர்வோடு வரும் வாக்கும் உடையவனாக இருப்பான்! அவனே அனுபவநிலையில் சும்மாவே சுகமாக இருப்பவனாகும்!



குறிப்பு :— நீ ஞானியை, பார்ப்பதில் அர்த்தமில்லை,
அந்த ஞானி, உன்னைப் பார்க்க வேண்டும்!
அந்த ஞானி, உன்னைப் பார்க்கும் நிலைக்கு,
நீ பக்குவப்பட்டிருக்க வேண்டும்!

பக்குவம் எனச் சொல்வது :— (A) மற்ற அனைத்தையும் தள்ளி
ஜீவன் முக்தியின் ஏக்கம்! (B) குற்றம் குறைகள் நாசம் செய்து
எல்லாம் ஸ்ரீ பகவான் செயலே, என்ற பூரண நிறைவு!
(C) காலம் விரயமாகிறதே என்ற உள்ள உருக்கம்!
(D) ஸ்ரீ பகவானுக்காகவும். அந்த காலத்தை ஒன்றுக்காகவும்;
கண்ணீர் பெருக்கம்! (E) கர்மா தொலையும் நிமித்தம்,
எப்பவனும் கருதாத, சேவை! (F) "நாவு" அடக்கம்! அதாவது,
இதமாகவும், மிதமாகவும், இறை ஒரு உணர்வோடும் பேசுதல்!
இந்த ஆறும் இருந்தால், ஓர் ஞானியின் விழிபட!
அனைத்தும் சாத்யமாகும்! ஜீவன் முக்தி பலிதமாகும்!

பலகால பழக்க வழக்கத்தினால், வந்த பயம்,
சாமான்யமாக தொலியாது :— பழக்கம் என்பது பேச்சு.
என்றும், வழக்கம் என்பது செய்கை என்றும், சொல்வார்கள்
நம் முன்னோர்! இதை நாமரூப, ஜகவாஸ, குணதோஷ,
பழக்க வழக்கமானது, சுமார் ஓர் 20 வருஷம், பழகிய
பழக்கமானது, உன் சாதனையின் எட்டு அல்லது பத்து வருஷ
பழக்கத்தில் போய் விடுமா? "அரசமரத்தை பலமுறை சுற்றி
உடனே அடிவயிற்றை (கரு உண்டாயிருக்கிறோமா என்று)
தடவிப் பார்த்த கதையாக" பார்த்தால் அனுபவப்பட முடியுமா?
ஓர் அழியும் ஜீவ சிருஷ்டிக்கே பத்து மாதம் காத்திருக்கிறாய்!
அழியும் பமப்புக்கே அதாவது பட்டம் பதவி, புகழ், பணத்

(83)



இவைகளுக்கே "காலேஜ்" படிப்பென (காவாண்டு அதாவது 25 வருஷம்) காத்திருந்து இல்லாமல் ஒன்றை, பெற்றுவிட்டதை வீணை போல், எகிறி எகிறிக் குதிக்கிறாய்!

ஸத்தியமான, நித்தியமான, ஸாஸ்வதமான, அழிவில்லாததான, மெய் அறிவை **ஆத்மாவை**

அதுவே நாம்! நாமே அது! என்று உணர்வைப் பெற, நீ எப்படி உழைக்கவேண்டும்? எத்தனை காலம் காத்திருக்க வேண்டும்? நன்றாக அறிவு ஊன்றிச் சிந்தித்துப் பாராய்! அப் பொய்யான உணர்ச்சி சாமான்யமாக, போகாதுதான்! ஆனால் உன் மெய் உணர்வை கொஞ்சம் பெருக்கினாலும், சூரியனைக் கண்ட பனிபோல், பொய் மறைந்து விடும். மெய்தானே பிரகாசிக்கும். இது இந்த ஏழையின், அநுபவமாகும்! இதுவரை சொன்ன நிலைகள் மெய்மை உறுதியாக பாரு! அல்லது பொய்மை இல்லை, இல்லை, இல்லை யென விட்டுப்படு!

அவஸ்யம் உன்னால் முடியும்! முடியாததை இந்தவைத்தியம் புலம்பாது! ஒருபங்கு முயற்சி உன் வசம்! ஒன்பது பங்கு கருணை, எம் வசம்! உன் முயற்சியோடு சும்மா சுகமாக இரு!

மனம் சாக வேண்டுமானால், அதாவது மனம் மௌனமாக வேண்டுமானால், ஏகபர பாவனையை, அகண்டான்ம பாவனையை, பிரம்மான்ம பாவனையை, ஞானான்ம பாவனையை, பரசொரூப பாவனையை, அதுவே நாம்! நாமே அது! என தைலதாரை போல் மனது ஒருமையுடன், பாவனை செய்து செய்து ஜீவன் முக்தி அடைவாயாக. வேறு எந்த பாவனையும், இல்லவே இல்லை யென, உணர்ந்து, ஞானான்ம பாவனையால் அது நாமென ஆகி, சும்மாவே சுகமாக இரு!



சந்தேகத்தால், கலக்கமும் வேகம்!
குற்றம் குறை! விருப்பு வெறுப்பும்,
கலக்கத்தால் கவக்கமும், செய்வதறியாது
திகைக்கும் மனமய மதியும், கலக்கத்தால்
பயதுக்கமும், பயதுக்கத்தால், புண்ணியபாப வினை பெருக்கமும்
வினைப் பெருக்கத்தால், ஜனன மரணமும். ஏற்படுவதன்
காரணம், ஒன்றே தான்! அந்த ஒன்று பக்தி இல்லாததேயாகும்.
பக்தியென யாம் குறிப்பிடுவது சர்வார்ப்பணமாகிய,
சரணாகதி செய்யாததேயாகும்! காரணம்?
நாமரூப ஜகத் ஜீவ, ஸ்வரூபங்கள் அனைத்தும் ஸ்ரீ பகவானுடைய
"மாயா" காரியமாகும்! அம்மாயா காரியமான,
பொருள்களோ! அதன் இயக்கமோ! ஸ்ரீ பகவானுடையதாகும்.
அவ்வியக்கத்தையும்; அப்பொருள்களையும், நான், எனது,
எனபாவனை பண்ணியதே "மன" மடமையாகும்!
அவ்வுடைமைகளையும், அவ்வியக்கத்தையும், நான், என்னால்,
என்னுடையது, எனக்கொள்ளாமல், எல்லாம் நீயே!
உன்னால்! உன்னுடையதே! என ஆக்கிக் கொண்டால்,
ஏற்று வந்த பிராரப்த வினைமட்டும் சுகமாய் முடியும்!
வேறு எந்த வினையும் தொடராது! நாம் ஏற்று வந்த வினையும்
சுகமான கர்மாவாக, முடிந்துவிடும்! வினையும், மனமும்,
பாபம் இல்லாத தன்மையினால், நாமே அது! அதுவே நாம்!
என சும்மாவே, சுகமாக இருக்கலாமே!



# உ

(85)

நீங்காமல் எங்கும் நீக்கமற நிறைந்த மும்மலமற்ற, "அறிவானந்த" சொரூபமே யாம்! யாமே அவ்வறிவாகிய ஆன்ம சொரூபம் என்ற, ஆழ்ந்த அமைதியில் நான் தூங்காமல் தூங்கும், ஹிருதயில் "அறிவின் அமைதி" பெற முடியுமே யல்லாது, வேறு எந்த சாதனையாலும், அவ்வமைதி பெற முடியாது. வேறு மற்றும் சாதனைகள் அனைத்தும், "மனோபார" அவஸ்தையை நான் கொடுக்கும். ஆகவே இதில் சொன்னபடி, ஹிருதயியுடன் சுகமாக சும்மாவே இருப்பாயாக!

அழியாத அசைக்காத, அதிஷ்டானத்தில் நாம் (அது நாம்! நாமே அது என) நிலைத்து நின்றுவிட்டோம். தொலையாத "துவைத" பயம், ஒழிந்து நாசமாகும்!

இதை சலனமில்லாமல், சிரிப்பில்லாமல், சந்தேக கலக்க பயமில்லாமல், செய்து சும்மாவே சுகமாக இரு!

தேகமுதல், அனைத்து நாம ரூபமும், "நான்" அல்ல! பாகம்பாகமாய் பிரித்துப்பிரித்து நாம ரூபம், கொண்டிருக்கும் அனைத்துப் பொருள்களும், "என்னுடையதும்" அல்ல! ஆனால் ஏகமாய், எங்குமாய், எதிலுமாய், எல்லாமாய் "யாமே" நிறைந்திருக்கிறோம், என்ற பரபாவனையில், நிலைத்துவிட்டால் "மோஹம்" ஒழிந்து நாசமாகும். அந்தவிநாடியே, முக்தனாக விளங்குவாய். அங்கு சும்மாவே சுகமாக இருக்கும் நிலையும், பெற்றுவிடுவாய்!



மனத்தான மாயாசக்தி என்றும்,
" மாயா சிருஷ்டி " ,
" சொந்த பந்தம் " ,
" பாசம் பற்று, உறவு, " ,
" புண்ணிய பாபம் " ,
" ஜனனம் மரணம் " ,
" பதமுக்தி, பரமுக்தி, " ,
"ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள்" ,

இவை அனைத்தின் "நாமரூப" பிணைப்புகள் அனைத்தும்,
"மாயாமனமே"யன்றி, மற்றொன்றில்லையென,
திட உணர்வால், உணர்ந்து சும்மாவே சுகமாக இரு!
அங்க சுத்தியால், சித்தம் சுத்தமாகும்!
கருவி கரண ஒழுக்கம்! ஸ்ரீ பகவத் ஆசார விதிகள்!
"பலன் கருதா" தானதருமங்கள்! தீர்த்தம்,
மூர்த்தி, ஸ்தலம், இவைகளை முறையோடு செய்தல்! முதலியவை
சித்த சுத்தியாகும்! சித்தம் சுத்தமானால், உன் சித்தமே,
"ஸிவபர" சொரூபமாகிவிடும்! சித்தம் சிவபர சொரூப
மாகும் போது, மேலே கூறிய, ஸத்கர்மாக்கள், ஒவ்வொன்
றும் மறைந்துவிடும்! மறைய வேண்டும்! மறையவில்லையானால்,
மேலே சொன்ன, ஸத்கர்மகாரியங்களில், நீ ஏதேனும்
"ஈர்ப்பு" வைத்திருக்கிறாய் என்று பொருள்படும்!



எதிர்பார்ப்பு இருந்தால், அது ஏமாற்றமே!

அதனால் சித்தமும் சுத்தமாகாது, அதனால், நிஸிதம்பர சொருபமும் ஆக முடியாது!

மேலே கூறிய, ஸத்காரிய கர்மாக்கள், "நீர்கா க" பசுடிக்கில், மனம் மயங்காக முடியாது!

எப்படி பூவில் தோன்றிய, பிஞ்சானது முதிர்ச்சியாகி, "பலன்" தரும் தருணம், பூவும் இருந்தால், பிஞ்சு வெம்பிப் போகும் (கெட்டுப் போகும்) அது சமயம் பூ வாடுகிறதே என, மனக் கவலை கொள்வது மனமடமை

~~நீ பண்ணின பூஜா பலனே, [illegible] என்றார்!~~ ஆம்.

அதாவது மேலே சொன்ன பூஜா விதி காரியங்கள், இயல்பாக மறையும் போது, மன நிறைவு கொள்ள வேண்டும்!

சந்தேக கலக்க பயம் கூடாது! கூடாது! கூடாது!

சித்த சுத்தியால் பெறும், ஸிதம்பர சொருபத்தில், பரிபூரண நிறைவுடன், கருங்கல்லில் போன்று அசையாமல் அதுவே நாம்! நாமே அது! என சுகமாக சும்மா இரு!

நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம்,
வர்த்தமானம் (வியாபாரம்) மனம், வாக்கு, காயம்,
ஆக இந்த பத்தும் "நாமரூப" ஜகத்திற்கு "மனதால்" பண்ணப்பட்ட, உயிரோட்டங்கள் ஆகும்.
இந்த உயிரோட்டங்கள் இல்லையென்றே, உலகோ, ஜீவர்களோ, காரசாரமான விளையாட்டுக்களோ,



உ

முக்காலங்களிலும், எக்காலங்களிலும், இல்லவே இல்லை, எனலாம்! இக்கற்பனையின், உயிரோட்டத்தினால், திட்டமிட்ட நாடகங்கள், திட்டமிட்டபடி வரையறுக்கப்பட்ட காலங்களில், இன்பதுன்பமென்றும், லாபநஷ்டமென்றும், வரவு செலவு என்ற நிலையில், புண்ணிய பாவ கணக்குகள், விகிதாச்சாரப்படி, பகிர்ந்து கொடுத்து ஜனன மரணமென்றும், சுழற்சியில் **மாயாவால்** நடத்தப்படுகிறது.

ஆனால், மேலே கூறிய இவை அனைத்தும், ஸத்தியத்தில் பரமார்த்திகத்தில் பொய் ஆகும்!

ஆனால் மேலே கூறிய, இவை அனைத்தும், லௌகீகம் தெய்வீகம் என்ற இருநிலைகள் **மன** இயக்கம் உள்ளவர்கள், மயக்க போதையினால், உண்டு எனப் பிதற்றுகின்றனர்.

உண்மையில், அப்படி ஒன்று இருப்பதாகவோ, நடைபெறுவதாகவோ தோற்றமும் இல்லை. சொல்லவும் இயலவில்லை. சில மஹான்கள், என்ன சொல்கிறார்கள் என்றால்? சிப்பியில் வெள்ளி போலும், கானலில் ஜலம் போலும், மன மருட்சியினால் தோன்றிய உண்மையில் இல்லை. உண்டு எனச் சொல்லியவர்கள் ஞானத் தெளிவை அடைந்த தன்மையினால், **வெய்யிலின்** முன் **மஞ்சா** எனப் போய் விட்டதென, ஆனந்தம் அடைந்தார்கள். அந்நிலையில் நாமும் சும்மாவே சுகமாக இருக்கலாமே!



உ



கூர்ந்து கவனித்தால், நாம ரூப பொருள்கள், அனைத்தும், தோன்றின என்றோ! இருந்தன என்றோ! மறைந்தன என்றோ! சொல்ல இடமே இல்லை! குறிப்பாக ஜகத்தை இயற்கையாக உணர்ந்தால் மண், மலை, ஜலம், மரம், செடி, கொடி, புல், பூண்டு என, மாக்கள் கொண்டு காண்கின்றோம். இதுவே இயற்கையின் நியதி! இவைகள் இயல்பாக மற்றொன்றாய் ஆவதும் இல்லை!

" " ஆக்குவதும் " !

" " ஒல் மறைவதும் " !

" " " மறைக்கப்படுவதும் " !

ஆனால்? "தான் தானாய்" இயற்கையின் நிலையில் ஜீரணித்து, பொடிப் பொடியாகி, அணுவாகி, ஜீவ அணுவாகி, ஜீவ ஆத்மாவாகி, பரமாத்மாவாகி, பரத்துடன் கலந்து விடுகிறது. இதுவே பிரத்தியட்ச உண்மையாகும்! இதுவே "சத்தே சத்தாக" இருக்கும் நிலையாகும்.

இப்படி சத் சத்தாகவே இருப்பதை, விளையாட்டின் நிமித்தமாக, அந்த சத்தானது, சற்று இறங்கி வந்து நிலையில் "சித்" என ஆகி, அந்த சித் என்னும் நாமாவையும் சற்று மாற்றி, சித்தம் (மனம், புத்தி, சித்தம் என) ஆக்கிக்கொண்டு, தம் சித்தத்தின் கற்பனையால், "விளையாட்டுப் பொருள்களாய்" (பொன், பணம், பொருள்கள், பாத்திர பண்டம், வீடு, தோப்பு, நஞ்சை, புஞ்சை, தோட்டம், என இன்னும் அநேக பொருள்களாய்)



உ

"நாமத்தின்" மூலம் ரூபத்தையும், "ரூபத்தின்" மூலம் நாமத்தையும், ஆதாரமாக்கும் "நாமரூபத்தை"

தனக்குத்தானே, மற்றொன்று போல், பிரகாசிக்கப் பண்ணிக் கொண்டது, என ஸ்ரீமஹான்கள் சொல்வர்!
விளையாடும் நிமித்தம் "மனம்" படைத்த மனிதர்களும், அம்மனம் படைத்த மனிதனின், புண்ணிய பாப கர்மாவின் நிமித்தம், நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும் கிருமி கீடங்களையும், அசையும் "ஸத்" சொரூபம், தாம் அசைக்கும் ஜீவத்தோற்றங்களை தமக்குத் தாமே, உண்டுபண்ணிக் கொண்டது! இவ்வுணர்வானது:- ஸத்தே ஸித்தானது என்றும், ஸித்தே ஜீவ தோற்றம் ஆனது என்றும், உணர்வால் உணர்க! முன்பே, இது ஓர் விளையாட்டு என சொன்னோம். அதை மறந்து விடலாகாது!
இவ்விளையாட்டானது, நீடிக்கும் பொருட்டும்!

காரசாரமாக அமையும் பொருட்டும்! அந்த ஸத்தாகிய ஸித்தே, மூன்றாவதாக, ஆனந்தமானது எனக் கொள்ளவேண்டும். ஆனால் இது இக்கலியில் மட்டும், அதை ஆனந்தமாக கொள்ள வேண்டாம் என்றும், இன்பமாக (துன்பமாகவும்) கொள்ள வேண்டும் என்று, ஸ்ரீமஹான்கள் சொல்வர்!
இந்த ஆனந்தம் எனச் சொல்லும் இன்பமானது நான் என்றும் என்னுடையது, என்ற, அஹங்கார, அதிகார, அபிமானங்களால் பின்னிவிட்டுக் கொண்டு "அஹமே" விளையாடிக் கொண்டிருக்கிறது!

உ





நான்! என்னால்! என்னுடையது! என்ற
அஹங்கார, அதிகார, அபிமானம், இல்லை
யானால், விளையாட்டும் இல்லை! அதைச்
சேர்ந்த, வினையும் இல்லை! வினை இல்லா
மையினால், ஜனன மரணமும் இல்லாமல்
போய் விடும்!

ஆனால் அஹங்காராதீத, "**பக்தே**" இப்படி, பந்தபவ
தோற்றங்களாகவும், தோன்றா இயக்கங்களாகவும்,
இயக்க கோர குணங்களாகவும், அதனால் ஜனனமரணம்
என்னும், ஓர் நிகழ்ச்சியையும், உண்டு பண்ணிக் கொண்டு,
பந்தபவ வடிவங்களில், விளையாடிக் கொண்டிருக்கிறது,
என்பதே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!!!
ஆனால் உனக்கு கஷ்ட நஷ்டமாகவும்! இன்பதுன்பமாகவும்!
துக்கம் துயரமாகவும்! சஞ்சலம் சங்கடமாகவும்!
விகார விவகாரமாகவும்! பயம் கலக்கமாகவும்! இப்படி
"**பயப்பிராந்தியாகவும்**" தோற்றுவது
எல்லாம், உன் மனமயக்க பிராந்தி கலக்கமாமே!
"**நான்! என்னால்! என்னுடையது!**"
என்ற மனமயக்க போதையே, உன்னை இப்பாடு படுத்துகிறது!
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!
என்ற அமிர்தம் உண்டால், மயக்க போதை தெளியும்!
நீயே அவனாகவும்! அதுவே அதுவாகவும்! அவஸ்யம் இருப்பாய்
இதை உறுதியன்றி அதுவாகவே, சும்மா சுகமாக இருக்கலாமே!





உ

மேலே சொல்லிய, மனமயிராந்தி மயக்கம், நீங்க வேண்டுமானால்? முன் சொல்லிய நிலையில், சர்வார்ப்பணமாக ஸ்ரீபகவானுடையதாக, ஆக்கிக் கொண்டோமானால், "மனோபாரம்" அதாவது மனச்சஞ்சலம். அதாவது மனதின் பாரமும். அதாவது மனச்சந்தேக கலக்க பயம்! முழுமையாக நீங்கும்! அதாவது மாயா பிறவி தோன்றிய, ஆட்டமாட்டம் எல்லாம் மாயாவிலேயே, மறைந்து மயமாகி விடும்! அங்கு மனம், மனோத்தானத்தன்மையில் அமர்கிறதே, அதுவே நாம்! நாமே அது! என சும்மா சுகமாக இருக்கலாம்.

"பதம்பத" நாமமும் இல்லை என்றும்,
"பதார்த்தமான" உருவமும் இல்லை என்றும்,
எனச் சொல்லும் கருத்தாவது:— பரமபதம் என்று சொல்லும் கைலாயம்! வைகுண்டம்! பிரம்மலோகம்! மணித்வீபம்! மேலும் நம்மை அருந்துள்ள சொர்க்காதி பேரானந்தலோகம்! ஆகிய "பதமுக்தியும்" போக்குவரவு உள்ள இடம் ஆகும்!

பக்ஷிக்கும் பதார்த்தங்களும்! பொன் பொருள் போகமும்! பட்டம் பதவி மோகமும்! ஜாதிமத நாமமும்! "நாமமே" சம்பந்தமான போகம், மோகம், தாபவஸ்துக்களாகும்!

இவையும் போக்குவரவு உள்ள இடமாகும்! இவை இரண்டையும் தள்ளி, போக்கு வரவற்ற இடமாகிய, கைவல்ய பரசொரூபத்தில், நிலைபெற்று சும்மா சுகமாக இருக்கலாமே!

பாபா.




Abode of Love

You Are Everything!